# ஏன் இந்த மௌனம்?

(கவிதைத் தொகுதி)



811.17

## கலாநெஞ்சன் ஷாஜஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த மௌனம் ?

(கவிதைத் தொகுதி)

**கலாநெஞ்சன் ஷாஜஹான்**

535046

**481/1, பல்லன்சேனை வீதி,**
**தளுபொத்த,**
**நீர்கொழும்பு**

535046


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Title | : EeN INTHA MAUNAM ? |
| Subject | : Collection of Poems |
| Author | : KALA NENJAN SHAJAHAN<br>481/1, Pallensena Road,<br>Dalupotha, Negombo, Sri Lanka. |
| Number of Pages | : 80 |
| Size | : 12.5 x 17.6 cm |
| Types | : 10 pt |
| Paper | : 70 gms |
| Copies | : 1000 |
| First Edition | : 1999 November |
| Typeset by | : SHELTA GRAPHICS<br>28/12, ST. Rita Road, Negombo. |
| Print by | : Print - N<br>Dalupotha, Negombo. |
| Copy right | : Reserved |
| Cover Art | : M.J.Sham |
| Price | : 60 /- Rs |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

UNIVERSITY OF PERADENIYA
2003-5-20
LIBRARY



இறையடி எய்திய
என்
அன்புத் தந்தைக்கும்
யுத்தத்தின்
இரும்புக் கரங்களில்
அகப்பட்டு
அன்றாடம் பலியாகும்
அப்பாவி மக்களுக்கும்
இந்த நூல்
சமர்ப்பணம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

1999 - அக்டோபர் 18 ஆம் திகதி எனது ஐரோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியிருந்த காலைப் பொழுது.

எனது பிறந்த மண்ணில் கால் பதித்த மறு கணமே எனக்கு கல்வி அறிவூட்டிய - கம்பஹா மாவட்டத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் கலாசாலை - விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரிக்கு செல்கின்றேன்.

அதிபர், நண்பர் கணேசலிங்கம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது - தாமே, தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறார் கலாநெஞ்சன் ஷாஜஹான்.

வியப்பினால் விழி உயர்த்திப்பார்க்கிறேன்.

அறிந்த பெயர். அறிமுகமில்லாத முகம்.

மேற்படி கல்லூரியின் பரிசளிப்பு விழா சிறப்பு மலரின்(1997) கவித்துவ செழுமைக்கு மெருகூட்டியவர் இந்த கலாநெஞ்சன்.

ஏற்கனவே 'மெட்டுச்சரம்', 'இதயகீதம்', 'மீண்டும் ஒரு தாஜ்மஹால்' மூலம் தன்னை கலை இலக்கிய உலகில் ஆழப்பதித்துக் கொண்டவர்.

இப்பொழுது 'ஏன் இந்த மௌனம் ?' என மௌனம் கலைக்க வந்துள்ளார்.

"உலகில் நிகழும் அநியாய, அக்கிரமங்களுக்காக வருந்துவதை விட - இதனைக்கண்டு பயங்கர மௌனம் காக்கும் அறிவுஜீவிகளைக் கண்டே நான் பெரிதும் வருந்துகிறேன்" என்றார் மார்ட்டின் லூதர் கிங்.

அவருக்கிருந்த தார்மீகக் கோபம் எங்கள் கலாநெஞ்சனுக்கும் இருக்கிறது. அதனால்தான் 'ஏன் இந்த மௌனம்?' எனக் கேட்கிறார்.

கொடுமைகளையும் அநீதிகளையும் கண்டு வெகுண்டு தர்மாவேசம் கொள்ளும் இயல்பு படைப்பாளிக்கே உரித்தானது.

கலாநெஞ்சனும் இதற்கு விதிவிலக்கல்ல.

தனது நூல் சமர்ப்பண பதாதையைக்கூட சமாதானப் புறாவினால் தூக்கிச் செல்ல பணித்தவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சமாதானத்திற்காக குரல் கொடுக்கும் 'ஜெனீவா'வை கண்டு களித்து தாயகத்தையும் தரிசிக்க வந்த வேளையில் தனது நூலுக்கு அணிந்துரை கேட்டுவந்தவரை அன்புக்கரங்களினால் அரவணைக்கிறேன்.

இருபதாம் நூற்றாண்டுக்கு விடைகொடுத்து புத்தம்புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கப் போகும் இந்த புதுயுக சங்கமத்தில் கலாநெஞ்சனின் கறைகள் பதிவாகிய நூல் **'ஏன் இந்த மௌனம் ?'**

ஆயுதக் கலாசாரம் அமைதிக்கு வேட்டு வைத்து மானுடத்தை அழித்துக் கொண்டிருக்கும் காலமிது.

அத்தகைய சூழலில் - உலக அமைதிக்காகவும் உள்நாட்டின் இன நல்லிணக்கத்திற்காகவும் உரத்துக் குரல் கொடுக்கும் கலைஞர்கள், படைப்பாளிகளின் வரிசையில் கலாநெஞ்சனும் ஒருவர்.

**பலிகள் நடப்பதை நிறுத்தட்டும் – உயிர்**
**பலிகள் நடப்பதை நிறுத்தட்டும்**
**இலங்கை நாடு ஒளிரட்டும் – இன**
**ஒற்றுமைப் பாட்டு ஒலிக்கட்டும்.**

என இவர் அறைகூவல் விடுக்கின்றார்.

ஒட்டு மொத்தமாக இந்நூலைப் படித்துப் பார்க்கும் போது **'எங்கள் தேசம்'** இவரது பேனாவில் பதிவாகி இருப்பதை உணர முடிகிறது.

அடிப்படை மனித உரிமை, அமைதி வாழ்வு - சமாதானம், மனித நேயம், பாஸிசத்திற்கு எதிரான குரல், நிகழ்ந்த தவறுகள், தேர்தல் கேளிக்கை, சுரண்டல், பொருளாதாரம், நாகரீகம், காதல், விளையாட்டு(கிரிக்கட்) ....... இப்படியாக பல துறைகளையும் இந்நூலுக்குள் சாமர்த்தியமாக அடக்கியிருக்கிறார்.

மரபுக்கவிதையும், புதுக்கவிதையும் ஏககாலத்தில் இவரது கை வண்ணத்தில் எம்மை சிலிர்ப்படையச் செய்கின்றன.

அதே சமயம் - **'அன்னை தேசத்தின் குருதி நாளும் தந்தை வானத்தின் இறுதி நாளும்'** - என்ற கவிதை என் கண்களை கசிய வைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 இன் முற்பகுதியில் மருதானையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் பலியான இவரது தந்தை மர்ஹூம் பி.எம்.ஸபருல்லாஹ்கான் - ஒரு காலத்தில் எனது நல்ல நண்பர்.

தொகுதியில் அவரது திரு உருவப் படம் பார்த்து - அக்கோரச்சம்பவத்தில் இவருமா பலியானார் ? என்ற தகவலை இப்போது தான் அறிந்து அதிர்ந்து போயிருக்கிறேன்.

வீரகேசரியில் நான் பணியாற்றிய காலத்தில் சிரித்த முகத்துடன் நகைச்சுவை ததும்ப ஏதேனும் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நண்பர் இன்று நிரந்தரத்துயில் கொண்டுவிட்டார் என்பதை அறியும் போது சோகம் என்னை வாட்டுகிறது. அவரது நினைவுகள் நெஞ்சை அடைக்கின்றது.

தாயகம் விட்டகன்று அந்நிய நாட்டில் நான் வாழ்ந்த போதும் - வேர் இங்கும் வாழ்வு அங்குமாக படர்ந்து இருக்கும் - நான் வேர் அறுந்து போகாத மனிதனாக இன்றும் வாழ்வதற்கு வகை செய்திருப்பது மானுடநேசம் தான்.

அந்த மானுட நேசம் இந்த கலாநெஞ்சனுக்கும் இருப்பதனால் - இவர் என் நெஞ்சத்துக்கு மிகவும் நெருக்கமானவர்- மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்

23 - 10 - 1999 (இலங்கையில்) **லெ.முருகபூபதி**

L.MURUGAPOOPATHY
170, HOTHLYN DRIVE,
CRAIGIEBURN,
VICTORIA 3064,
AUSTRALIA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மௌனத்தைக் கலைக்க வரும் இந்தக் கவிஞனிடமிருந்து .....

UNIVERSITY OF PERADENIYA
2003-5-20
LIBRARY

**"ஏன் இந்த மௌனம் ?"** என்று என் கவிதைகள் உங்களைத்தான் வினவுகின்றன. உள்ளே புகுந்தால் புரியும்.

உங்கள் மௌனம் அநீதிகளுக்கும், அநியாயங்களுக்கும், அழிவுகளுக்கும் துணைபோயிருக்குமாயிருந்தால் அந்த மௌனவிரதத்தை முதலில் மானுடநேயத்திற்காக விட்டுவிடுங்கள் என்று என் கவிதைகள் உங்களைக்கேட்டுக் கொள்கின்றன.

இத்தொகுதியிலுள்ள பல கவிதைகள் கேள்விக் கணைகளே. அறிவுரைகள் அல்ல; ஆலோசனைகள் அல்ல. அறிவுரைகளாகவும் ஆலோசனைகளாகவும் நீங்கள் ஏற்றுக் கொண்டால் அவை கேள்விக் கணைகளும் அல்ல.

சில கவிதைகள் உங்களை நோக்கி நீட்டப்பட்டிருக்கும் சுட்டு விரல்கள். அவை உங்கள் மௌனத்தைக் கலைத்தால் சந்தோஷமே.

ஓ ..... வாசக நெஞ்சங்களே ! என் இனிய தேச மக்களே! இந்தக் கவிதைத் தொகுதியின் மூலம் நான் பெரிதாக எதையும் சாதிக்கவோ அல்லது போதிக்கவோ வரவில்லை.

ஒரு கவிஞனுக்கே உரித்தான குணத்தோடு என்னுள் எரிந்து கொண்டிருக்கும் அக்கினியை ஆக்கமாக வடித்து உங்கள் முன் படைத்துள்ளேன்.

நான் ஏற்கனவே வெளியிட்ட '**மெட்டுச்சரம்**', '**இதயகீதம்**' எனும் இரண்டு இஸ்லாமிய கீத பாடல் தொகுதிகளும், '**மீண்டும் ஒரு தாஜ்மஹால்**' என்ற கவிதைத் தொகுதியும் பெரு வரவேற்பைப் பெற்றன. அதற்காக உங்களுக்கு என் நன்றிகள் உரித்தாகட்டும்.

நான்காவது தொகுதியை வெளியிட முயற்சி செய்யாது நான் **மௌனமாக** இருந்த வேளையில், பல நண்பர்கள் என் மௌனத்தைக் கலைத்தனர். அதன் விளைவு தான் '**ஏன் இந்த மௌனம் ?**' என்ற இந்தக் கவிதைத் தொகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுதி நலமே வெளிவர அருள் புரிந்த எல்லாம் வல்ல ஏக இறைவனுக்கே எல்லாப்புகழும் உரித்தாகட்டும்.

அணிந்துரை வழங்குமாறு நான் அணுகிய வேளையில் அன்புடன் ஏற்று எழுதித் தந்த பிரபல எழுத்தாளர் திரு.லெ.முருகபூபதி, ஒளியச்சுக் கோர்வை செய்த அன்பு மாணவன் அ.ஹில்ற்ரன்(ஷெல்ற்டா கிரா.ஃபிக்ஸ்) சிறப்பான முறையில் அச்சிட்ட 'பிரின்ட் - என்' உரிமையாளர் ஜனாப். கே.ஏ.நூருல்லாஹ், அச்சக ஊழியர்கள், ஒத்துழைப்பு வழங்கிய ஜனாப். என்.ஏ.சலாம், ஜனாப்.கே.ஏ.நஸ்ருல்லாஹ், அட்டைப்படத்தினையும் கவிதைகளுக்கான கருத்திட்ட சித்திரங்களையும் வரைந்து உதவிய இனிய நண்பன் ஜனாப். எம்.ஜே.ஷேம், மேலும் சில கருத்திட்ட படங்களை வரைந்த மாணவர்களான செல்வி லக்ஷிகா, செல்வன் ரவீந்திரநாத் ஆகியோருக்கும், இத்தொகுதியிலுள்ள எனது கவிதைகளைப் பிரசுரித்த வீரகேசரி, தினகரன், ஜனனி, ரோஜா, பூகம்பம் ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும் என் இதயத்தின் அடித்தளத்தில் பூத்திருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்கள் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை எதிர்ப்பார்த்து விடைபெறுகின்றேன்.

நன்றி !

அன்புடன்,
**கலாநெஞ்சன் ஷாஜஹான்**

இல. 481/1, பல்லன் சேனை வீதி,
தளுபொத்த,
நீர்கொழும்பு,
இலங்கை.
25 - 10 - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய கீதம் ஒலிக்கட்டுமே !

ஒற்றுமைப் பட்டு ஒலிக்கட்டும் — இன
ஒற்றுமைப் பாட்டு ஒலிக்கட்டும்
குற்றங் காணல் ஓயட்டும் — இனி
குற்றங் குறைகள் தேயட்டும்
மற்றவர் உரிமையைப் பேணட்டும் — அந்த
மானிட நேயத்தைக் காணட்டும்
உற்றம் உறவு மகிழட்டும் — இந்த
உலகம் எங்களைப் புகழட்டும் !

☆ ☆ ☆

வேற்றுமை யற்று சிறக்கட்டும் — மன
வேதனை யற்று இருக்கட்டும்
மாற்றங் காண விளையட்டும் — எங்கும்
மகிழ்ச்சிப் பொங்கி வழியட்டும்
தூற்றுங் குணம் அழியட்டும் — நாட்டில்
தூய மனங்கள் மலியட்டும்
போற்றுங் குணம் மலரட்டும் — இங்கு
பேதங்க ளெல்லாம் மறையட்டும் !

☆ ☆ ☆

வேஷம் கலைந்து போகட்டும் — இனத்து
வேசம் கலைந்து போகட்டும்
நேசம் கொண்டு வாழட்டும் — எங்கும்
நேய உணர்வுகள் வளரட்டும்
பாசம் மலிந்து தீரட்டும் — மண்ணில்
பாவச் செயல்கள் மாறட்டும்
தேசம் புதிதாய்ப் பிறக்கட்டும் — இந்த
துன்பங்க ளெல்லாம் பறக்கட்டும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகள் பெற்று ஒளிரட்டும் — மக்கள்
பெருமைகள் பெற்று ஒளிரட்டும்
பொறுமையைப் பற்றி அறியட்டும் — அதன்
பெருமையைக் கற்றுத் தெரியட்டும்
உரிமைகள் பெற்று உயரட்டும் — அதன்
உன்னதம் பற்றி உணரட்டும்
விரோதம் மண்ணில் மடியட்டும் — சோதர
வாஞ்சை நெஞ்சில் விடியட்டும் !

☆ ☆ ☆

போலி கோசங்கள் ஒழியட்டும் — பலர்
போலி வேஷங்கள் கிழியட்டும்
நீலிக் கண்ணீர் ஆறட்டும் — அவர்
நேசர் களாக மாறட்டும்
காலம் போற்ற ஒழுகட்டும் — எங்கும்
கருணை நெஞ்சில் துளிரட்டும்
வாழும் நாடு மணக்கட்டும் — புகழ்
வானைத் தொட்டு மணக்கட்டும் !

☆ ☆ ☆

மொழியின் பேதங்கள் நீங்கட்டும் — தமிழ்
மொழியின் போதங்கள் ஓங்கட்டும்
அழிவின் வாசல் மூடட்டும் — இன
ஐக்கிய கீதம் பாடட்டும்
கலைகள் யாவும் ஓங்கட்டும் — அந்த(க்)
கலையில் ஒற்றுமைத் தேங்கட்டும்
பிழைகள் எல்லாம் தீரட்டும் — அதில்
புரிந் துணர்வு சேரட்டும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தவை எல்லாம் மறக்கட்டும் — அவை
கடந்த வையாக இருக்கட்டும்
நடப்பவை நலமாய் நடக்கட்டும் — இந்த
நாட்டிற்கு அமைதி கிடைக்கட்டும்
அடிமை விலங்கு உடையட்டும் — மக்கள்
அமைதி என்றும் அடையட்டும்
மடமைக் கொள்கை வீழட்டும் — என்றும்
மனதை நீதி ஆளட்டும் !

☆ ☆ ☆

தேடும் ஐக்கியம் கிட்டட்டும் — நாம்
தேடும் ஐக்கியம் கிட்டட்டும்
சாடும் உள்ளங்கள் போற்றட்டும் — எங்கும்
சாந்தி சமாதானம் ஏற்றட்டும்
வாடும் நெஞ்சங்கள் துளிரட்டும் — இங்கு
வாழும் இதயங்கள் மலரட்டும்
நாடும் எண்ணங்கள் கூடட்டும் — இந்த
நாட்டில் இன்னல்கள் ஓடட்டும் !

☆ ☆ ☆

நாட்டை பிரிந்தவர் மீளட்டும் — சொந்த
நாட்டை பிரிந்தவர் மீளட்டும்
வீட்டை இழந்தவர் போகட்டும் — தான்
வாழ்ந்த ஊருக்குப் போகட்டும்
பூட்டிய கதவுகள் திறக்கட்டும் — அகதி
பட்டம் கொண்டதை துறக்கட்டும்
வாட்டிய சோதனை வாடட்டும் — பேச்சு
வார்த்தைகள் நல்லதை நாடட்டும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைகள் உடைந்து சிதறட்டும் — வேற்றுமை(ச்)
சிறைகள் உடைந்து சிதறட்டும்
கறைகள் மறைந்து செல்லட்டும் — இரத்த(க்)
கறைகள் மறைந்து செல்லட்டும்
குறைகள் அகன்று துலங்கட்டும் — ஈன(க்)
குணங்கள் அகன்று விளங்கட்டும்
திரைகள் வாழ்வில் விலகட்டும் — எங்கள்
தேசத்தில் நிம்மதி நிலவட்டும் !

☆ ☆ ☆

மொழிகள் இரண்டும் இணையட்டும் — தேசிய
மொழிகள் இரண்டும் இணையட்டும்
வழிகள் தேடி பேசட்டும் — புது
வழிகள் கோடி பேசட்டும்
பலிகள் நடப்பதை நிறுத்தட்டும் — உயிர்
பலிகள் நடப்பதை நிறுத்தட்டும்
இலங்கை நாடு ஒளிரட்டும் — இன
ஒற்றுமைப் பாட்டு ஒலிக்கட்டும் !

☆ ☆ ☆

**('இன ஐக்கியம்' — கவிதைத் தொகுதி — 1996)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமா உலகில் உதயம் ?

வாழத் துடிக்குது உலகம் — ஆனால்
வீணாய் உலகில் கலகம் !
காலம் ஒரு நாள் மலரும் — என்று
காத்திருக்கிறார் பலரும் !

☆ ☆ ☆

விரோதம் மண்ணில் மடியும் — என்று
வாஞ்சைகள் நெஞ்சில் விடியும் ?
குரோதம் என்று குறையும் ? — மனதில்
கனிவுகள் என்று நிறையும் ?

☆ ☆ ☆

போலி கோசங்கள் ஒழியும் — என்று
போலி வேசங்கள் கிழியும் ?
நீலிக் கொள்கைகள் சிதறும் — எந்த
நாளில் தர்மம் துளிரும் ?

☆ ☆ ☆

ஒற்றுமைப் பாட்டு ஒலிக்கும் — என்று
ஒற்றுமைப் பட்டு ஒலிக்கும் ?
வேற்றுமை யற்று சிறக்கும் — என்று
வேதனை யற்று இருக்கும் ?

☆ ☆ ☆

தேடும் ஐக்கியம் கிட்டும் — என்று
தேடும் ஒற்றுமை ஒட்டும் ?
வாடும் வையகம் விட்டும் — என்று
வக்கிர யுத்தம் நிற்கும் ?

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் உயிர்கள் உதிரும் — உயர்
மானிட நேயம் அதிரும் !
பாரில் நிம்மதி மறையும் — சில
பாவிகள் நெஞ்சம் மகிழும் !

☆ ☆ ☆

விடியத் துடிக்குது பொழுதும் — ஆனால்
விடிய வில்லையே அழுதும் ?
துடியாய்த் துடித்தே மனதும் — அதை(த்)
தேடித் தேடி எழுதும் !

☆ ☆ ☆

ஒரு நாள் இருளும் விலகும் — அந்த
விடிவில் உலகம் புலரும் !
திரு நாள் என்று மலரும் ? — என்று
தவியாய்த் தவிக்கிறார் பலரும் !

☆ ☆ ☆

அமைதிச் சூரியக் கதிரும் — இனி
அவணியில் என்றும் படரும் ?
அமைதிப் பறவை உலவும் — இனிய
நிலைமை யென்று நிலவும் ?

☆ ☆ ☆


வாழத் தவிக்குது இதயம் — இனி
வருமா உலகில் உதயம் ?
வாழத் துடிக்குது உலகம் — ஆனால்
வீணாய் உலகில் கலகம் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த மௌனம் ?




தேவி !
..........
தீக்குள் வைத்த
விரலாய்
என் இதயம்
.................... !

☆ ☆ ☆

ஆலையில் அகப்பட்ட
கரும்பாய்
என் நெஞ்சம்
.................... !

☆ ☆ ☆

'ஷெல்' பட்டு
சிதறிய தேகமாய்
என் உள்ளம்
.................... !

☆ ☆ ☆

அடைக்கலம்
கிடைக்காத
அகதியாய்
நான்
.................... !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைக் கலைந்த
கவிஞனின் நிலையாய்
என் எண்ணம்
.................... !

☆ ☆ ☆

சுட்டு வீழ்த்தப்பட்ட
யுத்த விமானமாய்
என் காதல்
.................... !

☆ ☆ ☆

தேவி !
இந்த தேச மக்களின்
அவலக் குரல் போல் ..........
இந்தப் பாவி மனம்
அழுகிறது !

☆ ☆ ☆

அது
உனக்குக் கேட்கிறதா ?
சொல் !
இல்லை
கேட்டும் கேட்காத மாதிரி ..!
புரிந்தும் புரியாத மாதிரி .... !

☆ ☆ ☆

தேவி !
ஏன் இந்த மௌனம் ?
பேசு !
நாம்
பேசித் தீர்வு காண்போம்.
எங்களுக்குள்
தினம் தினம் சாகாமல் !

☆ ☆ ☆

## பாஸிஸம்

என்
தேசத்தின்
தேகம் தேய்கிறது !
கடல்
அரிப்பால் அல்ல
பாஸிஸத்தால்

**வீரகேசரி**
**01 - 10 - 1995**

## எனது தேசம்

அன்று
இந்து சமுத்திரத்தின்
முத்து !
இன்று
அதன் கண்ணீர்த் துளி !
அன்று
மாணிக்கத் தீவு !
இன்று
புதை குழி நாடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA LIBRARY

# ஒற்றுமை மலரட்டும்! வேற்றுமை மறையட்டும்!

இயற்கையெழில் பொங்கு கின்ற இலங்கை நாட்டில்
உலவு மிந்த யுத்த மேகம் மறைந்திடாதா ?
துயரமதை நெஞ்சமெல்லாம் தேக்கி வைத்து
தவிக்கும் மக்கள் மனதில் இன்பம் பூத்திடாதா ?
பயத்துடன் நகருகின்ற மனித வாழ்கை
பரவசமாய் மாறுகின்ற நிலைவராதா ?
சுய நலங்கள் பொது நலமாய் ஆகிடாதா ?
சாந்தி, சமாதானம் நாட்டில் வாழ்ந்திடாதா ?

☆ ☆ ☆

யுத்த சத்தம் எதிரொலிக்கும் தாயகத்தில்
யுக்தியாகப் பேசித் தீர்வு காண்பதென்று ?
புத்தனது பௌத்த மதம் வாழும் நாட்டில்
புதிய வழி கண்டமைதி காண்பதென்று ?
ரத்தமழைக் கொட்டுகின்ற இந்த மண்ணில்
ரணங்களாறி அமைதிப் பூக்கள் பூப்பதென்று ?
இத்தரையில் வாழுகின்ற மாந்தரெல்லாம்
அமைதியாக வாழுகின்ற நாளுமென்று ?

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் லாபத்திற்காய் சில கயவர்
இன உணர்வை முடியுமட்டு மெரியவிட்டார் ;
எரிகின்ற வீட்டினிலே நெருப்புக் கேட்கும்
இழி குணத்தார் துவேஷத்தை வளரவிட்டார் ;
ஒரு தாய் மக்களென இலங்கை மக்கள்
ஐக்கியமாய் வாழ்வதை யவர் கெடுத்தார் ;
உரிமைகளை மறுத்துரைத்து ஒதுக்கி வைத்தார் ;
இனங்களிடையே கசப்புணர்வை தூண்டிவிட்டார் !

☆ ☆ ☆

இனங்கள் நான்கு வாழுகின்ற இந்த மண்ணில்
ஒற்றுமையே உயர்வுக்கான வழியுமன்றோ ?
பிணக்குக் கொண்டு பிரிந்து நாங்கள் இருந்திட்டாலே
பெருமையில்லை; வளமுமில்லை; நலனுமில்லை !
இனங் களுக்குள் ஓங்குகின்ற ஒற்றுமை ஒன்றே
இந்த நாட்டை இனியும் காக்கும்; ஆயுதமல்ல !
உனது எனதென்ற பேதம் தேவையில்லை !
இந்த அகிலமதில் எதுவும் நிலையுமில்லை !

☆ ☆ ☆

இந்த நாடு யாவருக்கும் பொதுவே யென்று
எண்ணுகின்ற மனம் வேண்டும் இந்த மண்ணில் !
இந்த நாட்டு மக்களெல்லாம் சமமே யென்று ,
ஆளுகின்ற தலைவரெல்லாம் நினைக்க வேண்டும்!
சொந்த நாட்டுப் பற்று வேண்டும் மக்கள் மனதில் !
சொர்க்கமாக நினைக்க வேண்டும் பிறந்த மண்ணை!
எந்த நாடும் சொந்த நாடாய் ஆகிடாது !
அன்னை பூமி உயிரிலும் உயர்ந்ததாகும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடந்தோறும் சிங்களத் , தமிழ்ப் புத்தாண்டை
வரவேற்றுக் கொண்டாடுவர் இரு இனத்தாரும் !
சிறப்புமிக்க அந் நாளில் முஸ்லிம் , பேகர்
சந்தோசமாய்க் கூடிக் களிப்பர் அவர்களோடு !
பெரு நாட்களாம் நோன்பு , ஹஜ்ஜுத் தினங்களிலே
பிரியமாக இஸ்லாமிய நண்பர் வீடு செல்வர் !
கிறிஸ்மஸ் தினத்தில் கிறிஸ்தவ தோழரோடு
கைக் கோர்த் தாடிமகிழ்வர் நேசத்தோடு !

☆ ☆ ☆

இந்துக் கோயிலிலே ஐயர் சொல்லும் 'மந்திரமும்'
இறை பள்ளியிலே ஓதுகின்ற 'பாங்கி' னோசையும்
சிந்தைத் தொடும் தேவாலய 'செபத்தி' னோசையும்
சேர்ந் தொலிக்கும் பௌத்த விகாரை 'பிரித்தோடு' !
சுந்தர நாட்டினிலே சோதர வாஞ்சையோடு
சுதந்திரமாய் வாழும் நிலையு மிருக்க
சிந்தையில் நச்சு விதைத் தூவிய பாவிகள் யார் ?
சிதறிப் போனதிங்கே இன ஐக்கியமே !

☆ ☆ ☆

வளங்கள் மிகுந்த மண்ணின் பெருமை யுணராது
வீணில் சண்டைப் பிடித்து மடிந்து போவதேன் ?
இளைஞரது சக்தியை அழிவுக்குட் படுத்தி
ஆக்க முயற்சி தனை மறந்து போவதேன் ?
அழகிய மலராம் இலங்கையி னிதழ்களை
ஆயுத முட்களால் குத்திக் கிழிப்பதேன் ?
தலை முறைப் பலவும் ஒன்றாய் வாழ்ந்து ; நாளைய
தலை முறைக்குக் குரோதத்தைக் கொடுப்பதேன் ?

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ! வடக்கு, தெற்கு என்கின்ற பேதமில்லை !
எல்லோரும் இலங்கையராய் வாழ்ந்தனரே !
அன்று ! இனவிரோதப் புயலும் வீசவில்லை !
எல்லோரும் ஐக்கியமாய் இருந்தனரே !
அன்றில்லாத பேதங்கள் இன் றெப்படி
இனங்களிடை தோன்றியது ? எண்ணிடுக !
இன்றைய நாளி லதைக் கண்டறி வோம் !
அழிவின் வாசல் மூடி நாட்டைக் காப்போம் !

☆ ☆ ☆

இன, மத, மொழி வேற்றுமைகள் மறந்து
இனி தாய்ப் பழகிய அந்த நாட்க ளெங்கே ?
மன மெல்லாம் பிணமாகி ; குணமெல்லாம்
மலடாகி ; நாங்களின்று போவதெங்கே ?
இன உறவை துவேச நெருப்பால் எரித்தால்
அழிந்து போவதெங்கள் அன்னை பூமியல்லவா ?
பிணக் காடாய் நாட்டை யாக்காமல் நாங்கள்
புரிந் துணர் வென்பதை வளர்த்திட வேண்டும் !

☆ ☆ ☆

புரிந்துணர் வின்றி இனங்கள் வாழ்வதாலே
புரியாத புதிராய் போரும் தொடருதிங்கே !
புரிந்துணர் விருந்தால் சந்தேகமில்லை ; சிறு
பான்மை, பெரும் பான்மை பேதங்களு மில்லை !
ஒருவரது மொழியை யடுத்தவர் கற்க வேண்டும் ;
இனங்களிடையே ஒற்றுமைக் கதவசியமாகும் !
ஒரு தாய் மக்களென தாய் நாட்டில்
ஒன்றாய் வாழ்வதே நன்மையாகும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் என்ற ஒன்றே உலகில் கொடியதாகும் !
யுத்த நோய்க் கண்டால் நாடு நலிந்து போகும் !
ரத்த ஆறு ஓடி, மண்ணும் சிவந்து போகும் !
ரணங்களாக மக்கள் உள்ளம் மாறிப் போகும் !
புத்தி கெட்ட மனிதர் செய்யும் செயல் போலே
போரின் எதிர் விளைவை மக்கள் காண நேரும் !
நித்தம் கேட்கும் யுத்த ஓசை ஓய்ந்திங்கே
நாட்டு மக்கள் நலமே என்றும் வாழ வேண்டும் !

☆ ☆ ☆

**பேராதனைப் பல்கலைக்கழக**
**'மாணவ சாகித்திய விழா - 1997' சிறப்பு மலரில் வெளிவந்தது.**

## எங்கள் தவறுகள்

நாங்கள்
சமாதானம் பேச வந்தோம்
ஒற்றுமையைத் தொலைத்துவிட்டு!
ஒற்றுமையைத் தேடுகிறோம்
சமாதானத்தைத் தொலைத்துவிட்டு!
நிம்மதியைக் காணவந்தோம்
அமைதியைத் தொலைத்துவிட்டு!
அமைதியைத் தேடுகிறோம்
நிம்மதியைத் தொலைத்துவிட்டு!

**வீரகேசரி**
**05 - 09 - 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தேசத்தின் குருதி நாளும் தந்தை வானத்தின் இறுதி நாளும் !

**( 05 - 03 - 1998 அன்று கொழும்பு, மருதானை ரயில் நிலையத்தின் முன்பாக நண்பகலில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் அகால மரணமானவர்களுள் ஒருவர் என் தந்தை மர்ஹூம் பி.எம்.ஸபருல்லாஹ்கான் அவர்கள். அந்தக் கோரச் சம்பவத்தை வைத்து எழுதப்பட்ட கண்ணீர்க் கவிதை இது.)**



1998 மார்ச் 5ம் திகதி !
அன்று
எல்லோருக்கும் போலவே
எனக்கும் விடிந்தது !
ஆனால்
என் விடியல் மட்டும்
நண்பகலிலேயே
அஸ்த்தமனச் சிறைக்குள்
தனக்கொரு
கல்லறையைக் கட்டிக் கொண்டது!

அன்று
எனக்கு இருட்டு நாள் !
என் குடும்பத்துக்கும் தான் !

ஆம் !
அன்றைய தினம்
மருதானை
ரயில் நிலையத்தின்
முன்பாக
எமனின் வாகனம்
தடம் புரண்டது !

'இன்டர்சிட்டி பஸ்ஸில்'
எதற்கோ
குறிவைத்துப் புறப்பட்ட
நடமாடும் குண்டுப்
படையொன்று
தன்
இலக்குத் தவறிய
அவசர அவசியத்தில்
பாதியிலேயே
வீதியில்
வெடித்துச் சிதறியது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி - அன்று
மதி கெட்டு
வீதியில்
விளையாடியது !

அந்த
அக்கினிப் பாதையில்
அணிவகுத்துச் சென்ற
வாகனப் பறவைகள் பல
தனது சிறகுகளை இழந்தன !
இன்னும் சில சல்லடைகளாயின!
வேறு சில சவங்களாயின !

எங்கும் ரத்தம் ..... !
எங்கும் சத்தம் ..... !
மரண தேவதையின் வாயில்
ஆயிரம் முத்தம் !

வெள்ளைச் சீருடை
மாணவர் சிலர்
சிகப்புச் சீருடையில்
ரத்தப் பூக்களாய்
உதிர்ந்து வீழ்ந்தனர் !

பாதசாரிகள் சிலர்
பாதைப் பாடையில்
நிரந்தரப் பயணத்திற்கு
நாதியாய் வீழ்ந்தனர் !

அங்காடி வியாபாரிகளின்
அங்கங்கள் சில
அங்கொன்றும் இங்கொன்றாய்
காகங்களுக்குத் தம்மை
ஏல விற்பனை செய்தன !

அந்த
மருதானை வீதியில்
ரத்த ஆறு
ரகசியமாய் ஓடியது !

மருதானைப் பாலமும்
அதன்
சின்னச் சின்னக் கடைகளும்
கடைகளின் சுவர்களும்
வாயில் கதவுகளும்
வெயிலில் விளைந்த
வியர்வை முத்துக்களாய்
குண்டு துப்பிய
சன்னப் பொட்டுக்களை
தேக முகமெங்கும்
ஆயிரமாய் ஒட்டிக்
கொண்டன!

அந்த
மரண நிமிஷத்தில் .....
அந்த
மரணப் பாதையில் .....
'வேன்' ஒன்றை
ஓட்டிச் சென்ற
என் வாப்பாவும்
'வபாத்தாகி'இருந்தார் !

'இன்னா லில்லாஹி
வஇன்னா இலைஹி
ராஜிஹுன் !'

அந்த
அக்கினிச் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை
எட்டிய போது
என் இதயத்திலும்
பாரிய குண்டொன்று வெடித்தது!

என் தாத்தா
அந்த
மரண தூதை
என் உம்மாவுக்கு
வாசித்த போது .....
உம்மாவின் இதயத்தில்
அணுகுண்டு வெடித்தது !

"ஏன்ட தங்கமே" !
என்றவர்கள்
கல்லாய் சமைந்தார்கள் !
கண்ணீரைக் காணவில்லை !
யாரோடும் பேசவில்லை !

'டாக்டர்' வந்து
பார்த்து விட்டு
"பிரஸர்" என்று
மருந்து கொடுத்தார் !
மருந்தும்
மறக்காமல் வேலை செய்தது !
தூக்கம் வந்து ஆறுதல் கூற
துக்கம் தற்காலிகமாக
ஓய்வெடுத்துக் கொண்டது !

விடியும் வரையும்
அப்படியேதான்
அடுத்த நாள் காலை தான்
என் உம்மா
வாப்பாவை பார்த்தார்கள்.

எப்போதும் போலவே
இப்போதும் அவர்
கம்பீரமாய் இருந்தார்.
ஆனால் -
வெள்ளை 'கபன்' உடுத்தி !

அந்த -
குண்டின் கரங்களுக்கு
அவர்
தேகத்தை சரியாய்
தீண்ட முடியவில்லை போலும் !
இடது கண் ஒன்றே
இல்லாமல் இருந்தது !
முன் கழுத்திலும்
சின்னதாய் துளை !

சோகக் கடலில்
சோர்வாய் நின்றபடி
தன்
உதய சூரியனின்
இறுதி அஸ்த்தமனத்தை
ஈர விழிகளோடு
பார்த்துக்
கொண்டிருந்தார்கள் உம்மா!

என்
இரண்டரை வயது
மூத்த மகள்
தன் பிஞ்சு வாயால்
"அப்பா ..... அப்பா .....
எழும்புங்கோ" என்கிறாள்.

அந்த
சோகச் சூறாவளியிலும்
என்
சிந்தனைப் பறவை
பின்னோக்கிப் பறந்தது .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களில்
'மித்திரன்' பத்திரிகையில்
இஸ்லாமியக் கட்டுரைகளை
நோன்பு கால சிந்தனைகளை
அமைதியாய் எழுதி வந்த
ஒரு இலக்கியப் புத்திரன்
என் வாப்பா !

'ஹலீமா மணாளன்'
எனும் பெயரிலும்
உம்மாவின் பின்னால்
மறைந்து எழுதியவர்.

வாசிப்பதில்
அவருக்கு
அகோரப் பசி.
வீட்டிலும் வைத்திருந்தார்
வாசிகசாலை - அவர்
வசிப்பதற்கும் சேர்த்து !

நான் - அந்த
வாசகனின்
வாசகன்.

அவர்
வீரகேசரியிலும்
வேலை செய்தார்
பல வருடங்கள்
முழு நேரமாய்.
பொலீஸிலும்
வேலை செய்தார்
சில வருடங்கள்
பகுதி நேரமாய்.

பின்பு
புனித மக்க நகரில்
வேலை செய்தார்
ஐந்து வருடங்கள் சாரதியாய் !
இறக்கும் வரை
உழைத்துக் களித்த
இரும்பு மனிதர் அவர் !

ஒவ்வொரு நாள்
விடியற் காலையிலும்
பத்திரிகையோடு
விழித்துக் கொள்ளும்
வாப்பாவை
அன்றைய தினசரிகளின்
மரணப் பட்டியலில்
செய்தியாய் வாசித்தேன் !

நேரம்
காலை 10.30 மணி !
அது - இந்த
தேச மகனின்
தேக மடலை
மண்ணின் முகவரிக்கு
அஞ்சலிடக் குறிக்கப்பட்ட
அஞ்சலி நேரம் !

சிந்தும் கண்ணீருடன்
என் கரங்கள்
'சந்தூக்கை' தூக்குகிறது.

ஓ ..... வென
அழுகையின் அலறல்கள்
ஓங்கி ஒலிக்க .....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
535046

என்
இதயத்தின் ஓலமும்
அதில் கலக்க .....
இந்த தேச மகனின்
இறுதிப் பயணம்
கண்ணீர் அமைதியோடு
மாளிகாவத்தை
மைய வாடிக்கு
மெல்லப் புறப்பட்டது !

திரும்பிப் பார்க்கிறேன் !
தேசத் தாயின்
அப்பாவி மக்கள்
நூற்றுக் கணக்காய்
மையத்தோடு வருகிறார்கள்....
ஜாதி, மத பேதமின்றி !



**குறிப்பு** :-

வபாத்தாகி - மரணமாகி

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஹூன் - நாங்கள் இறைவனுடையவனாக இருக்கிறோம். அவனிடமே திரும்பிச் செல்லக்கூடியவனாக இருக்கிறோம்.

கபன் - இறந்தவருக்கு அணிவிக்கும் ஆடை.

சந்தூக்கு - இறந்தவரை அடக்கம் செய்ய கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பொக்கிஷம்

எங்கள் தேச மக்களெல்லாம் ஒன்று கூடி
ஒன்றை மட்டும் தேடுகிறார் நெடுநாளாய் !
எங்கேயும் தேடியதுவும் கிடைக்கவில்லை !
என்றாவது ஒரு நாள் கிடைத்திடுமா ?

☆ ☆ ☆

எல்லோரும் கூடித் தேடி வாடி நிற்கும்
அது என்ன பொன்னா ? ரத்தினமா ?
இல்லை ! இல்லை ! அதற்கெல்லாம் விலையுண்டு
இது விலையில்லா சமாதானப் பொக்கிஷமே !

☆ ☆ ☆

சமாதானப் பொக்கிஷத்தை தொலைத்துவிட்டு
சல்லடைப் போட்டு நாங்கள் தேடுகின்றோம் !
சமாதானம் என்பதின்று உதட்டளவில்
சண்டைக் குணம் என்பதுதான் உளத்தருகில் !

☆ ☆ ☆

சமாதியிலே உயிரோடு புதைத்து விட்ட
சமாதானத்தை யார் வந்து மீட்டெடுப்பார் ?
சமாதானப் பறவை வானில் பறப்பதென்றால்
சத்தியமாய்ப் போர் மேகம் மறைய வேண்டும் !

☆ ☆ ☆

பேச்சினிலே மட்டுமது வாழ்ந்திடாமல்
பேச்சு வார்த்தையிலே தீர்வு கண்டு வாழவேண்டும்!
மூச்சு நின்று போகுமுன்னர் மீட்டெடுத்து
மக்கள் தேடுகின்ற பொக்கிஷத்தைக் கொடுக்க வேண்டும்!

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்த தேசத்தை ஒன்றிணைப்போம் வா !



மனிதனே வா !
பேர்ளின் சுவரை
உடைத்தெறிந்ததைப் போல்
இங்கே சிலர்
இதய நிலத்தில் கட்டியிருக்கும்
வேற்றுமைச் சுவர்களை
உடைத்தெறிவோம் !

மனிதம் என்ற
உயர் பதம் புரிய .....
புது இதயம் செய்து
சிலருக்கு நாங்கள்
பொறுப்பாய்ப் பொருத்துவோம்!

மனிதனே வா !
இந்த
தேச மண்ணின்
ஒவ்வொரு துகலும்
எல்லோருக்கும் சொந்தம்
என்பதைச் சொல்லிக்
கொடுப்போம் !

சொந்த நாட்டில்
அகதியாகி
சிந்தும் கண்ணீர்
ரத்தக் கண்ணீர்
என்பதைப் புரியவைப்போம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம்

வானில் பறக்கும்
நூலறுந்த பட்டமா
இந்தச் சமாதானம் ?

விளக்கில் விழுந்த
விட்டில் பூச்சியா
இந்தச் சமாதானம் ?

சமாதியில் புதைந்த
வெள்ளைப் புறாவா
இந்தச் சமாதானம் ?

தூக்கத்தில் தெரிந்த
பகல் கனவா
இந்தச் சமாதானம் ?

கனவில் தெரியும்
நிழல் உருவமா
இந்தச் சமாதானம் ?

காலன் எழுதும்
தொடர் கதையா
இந்தச் சமாதானம் ?

அரசியல் வாதிகள் போட்ட
விடு கதையா
இந்தச் சமாதானம் ?

வீரகேசரி
13-06-1999

வான் மதியும்
வீசும் தென்றலும்
வீழ் மழையும் போல் .....
இந்த தேசமும்
பொது என்போம்
எல்லோருக்கும் !

வா மனிதா !
சமாதானப் புறாக்களைப்
பறக்கவிட்டு
ஆராதனை செய்து
அழகு பார்ப்போம் !

விரிந்த உலகில் - தமக்குள்
பிரிந்த தேசத்தை
ஒன்றிணைப்போம் வா !
ஒன்றாய் இருப்போம் வா !

## ஒற்றுமை மலர்கள்

ஒற்றுமை மலர்கள்
பூக்க வேண்டும்
வார்த்தைப் பாதையில்
அல்ல.
இதயப் பூங்காவில் !
மேடைப்பேச்சில்
அல்ல.
நடைமுறை வாழ்வில் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பட்டுச் சிறகடித்து வா வெண்புறாவே !

வெண்பட்டுச் சிறகடித்து வரவேண்டும் வெண்புறாவே
வேற்றுமை யகற்ற நீ வரவேண்டும் வெண்புறாவே
மண் மீதிலே அமைதித் தங்க வேண்டும் வெண்புறாவே
மகிழ்ச்சி யெங்கும் பொங்கி வழியவேண்டும் வெண்புறாவே !

☆ ☆ ☆

தேசமெங்கும் ஒற்றுமை ஓங்க வேண்டும் வெண்புறாவே
தேடும் நிம்மதி யெங்கும் காண வேண்டும் வெண்புறாவே
நாசமாகும் மனித வாழ்வு மாற வேண்டும் வெண்புறாவே
நேசமாக யாரும் இங்கே வாழ வேண்டும் வெண்புறாவே!

☆ ☆ ☆

பேதங்களெல்லாம் இங்கே தீர வேண்டும் வெண்புறாவே
புரிந்துணர் வோடு யாரும் சேர வேண்டும் வெண்புறாவே
வேதனை யெல்லாம் நீ போக்க வேண்டும் வெண்புறாவே
வாழும் வழிதனை நீ காட்டவேண்டும் வெண்புறாவே !

☆ ☆ ☆

மக்கள் துயர் நீ துடைக்க வேண்டும் வெண்புறாவே
மானிட நேயம் நீ வளர்க்க வேண்டும் வெண்புறாவே
மக்கள் சக்தி நல்லதைப் படைக்க வேண்டும் வெண்புறாவே
மண்ணில் சாந்தி, சமாதானம் நிலைக்க வேண்டும் வெண்புறாவே!

☆ ☆ ☆

அழிவின் வாசல் நீ மூட வேண்டும் வெண்புறாவே
ஐக்கிய கீதம் நீ பாட வேண்டும் வெண்புறாவே
அழகிய தேசமாம் இலங்கை யதில் வெண்புறாவே
ஒற்றுமைப் பூக்கள் அழகாய்ப் பூக்க வேண்டும் வெண்புறாவே!

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலம்

மேடைப் போட்டு ஒட்டுக் கேட்க வேளை வந்தது
மாலைப் போட்டு ஆடிப்பாட காலம் வந்தது
சாடிப் பேசி சண்டைப் போட நேரம் வந்தது
சுவரொட்டி யொட்டி போட்டிப் போட தேர்தல் வந்தது !

☆ ☆ ☆

வாக்கு வேட்டை செய்ய வென்று கட்சி இறங்குது
வாக்குறுதிகளை அள்ளி வீசி ஊரை ஏய்க்குது
போக்கு வரத்து வீதிகளைப் பழுது பார்க்குது
புது கம்பங்களை கதியில் நாட்டி மின்சாரம் வழங்குது !

☆ ☆ ☆

வீடு வீடாய் நாடி வந்து பிரசாரம் நடக்குது
வீதி யெங்கும் பலவர்ண கொடிகள் பறக்குது
கூடிக் கூடி வியர்வை சிந்த வேலை நடக்குது
கட்சிப் பிரியம் கூடியதால் கலகம் பிறக்குது !

☆ ☆ ☆

தேர்தல் கால விஞ்ஞாபனம் அரங்கம் ஏறுது
தேர்தல் முடிந்தால் விஞ்ஞாபனம் காற்றில் பறக்குது
தேர்தல் களத்தில் வேட்பாளர்கள் முகங்கள் தெரியுது
தேர்ந்தெடுத்த பின்புதானே உண்மை புரியுது !

☆ ☆ ☆

UNIVERSITY OF PERADENIYA
2003-5-20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது யுகம் ஒன்று பிறக்கவேண்டும் !

புது யுகமொன்று மலர்ந்திட வேண்டும்.
யுத்தமில்லாத பூமியும் வேண்டும்.
விடிவின் ஒளியும் படர்ந்திட வேண்டும்.
புதிதாய் மனிதன் பிறந்திட வேண்டும்.

☆ ☆ ☆

சொந்த நாட்டிலே மக்கள் அகதியாய்
ரத்தக் கண்ணீரில் தினமும் சாகிறார்.
கேள்விக் குறியாக வாழ்க்கைத் தொடருதே
மனித உயிர்களின் மதிப்புக் குறையுதே !

☆ ☆ ☆

பறவை இனங்கள் பறக்கும் வானிலே
இயந்திரப் பறவைகள் பறந்திடுதே.
வான் மழைப் பொழியும் மண்ணின் மேலே
குண்டுகள் மழையாய் பொழிந்திடுதே !

☆ ☆ ☆

வெந்த புண்ணிலே வேலும் பாயுதே
வெட்டிச் சண்டையாய் யுத்தம் ஆனதே.
கண்ணி வெடிகளும் ஷெல்லின் கரங்களும்
அக்கினிக் கவிதைகள் வடித்திடுதே !

☆ ☆ ☆

சுந்தர நாடு சுடுகாடானதே
மனித உரிமைகள் புதைந்து போனதே.
புதுயுகமொன்று பிறக்க வேண்டுமே
மானுட நேயம் சிறக்கவேண்டுமே !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தேசத்தின் எழுச்சிக்காக ..........

துயரமது தேங்கி நிற்கும் இலங்கையிலே
தவழுகின்ற யுத்தப் புயல் ஓய்ந்திட வேண்டும் !
மயக்கத்திலே தூங்கு கின்ற இதயங்களை
மனித நேய கரங்கள் வந்து எழுப்பிட வேண்டும் !
பயத்துடன் வாழுகின்ற மாந்த ரெல்லாம்
பரவசமாய் வாழுகின்ற நிலை வர வேண்டும் !
அயர்ந்து போன எங்கள் மக்கள் மனங்களிலே
அமைதி வந்து உற்சாகம் ஊட்டிட வேண்டும் !

☆ ☆ ☆

யுத்த மழைக் கொட்டு கின்ற தேசத்திலே
புத்தம் புது சாந்திமாரி பொழிந்திட வேண்டும் !
ரத்த ஆறு ஓடுகின்ற பூமியிலே
ரம்மியமாய் அமைதிப் பூக்கள் பூத்திட வேண்டும் !
சித்தமெல்லாம் கலங்கி வாழும் மானிடரை
சமாதானச் செய்தி வந்து தேற்றிட வேண்டும் !
புத்தனது பௌத்தம் வாழும் புனித நாட்டில்
போர் அகன்று புரிந்துணர்வு பெருகிட வேண்டும் !

☆ ☆ ☆

சொந்த நாட்டில் அகதியாகி சிந்தும் கண்ணீர்
சடுதியிலே மாறுகின்ற நிலை வர வேண்டும் !
வெந்தப் புண்ணில் வேலைப் பாய்ச்சும் வெட்டிச் சண்டை
வேரோடு சாய்கின்ற நாள் வர வேண்டும் !
அந்த நாளில் வாழ்ந்த எங்கள் முன்னோர் போலே
ஐக்கியமாய் இன்று நாங்கள் வாழ்ந்திட வேண்டும் !
சிந்தையிலே நல்ல வழி தோன்றிட வேண்டும் !
சீக்கிரமாய் வெண்புறாக்கள் பறந்திட வேண்டும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் மக்களென அன்று வாழ்ந்த
இன்ப நாட்கள் மீண்டும் இங்கு மலர்ந்திட வேண்டும் !
சிறு பான்மை பெரும்பான்மை என்ற பேதம்
ஒரு போதும் இல்லை இனி என்றிட வேண்டும் !
உரிமைகளை மறுத்துரைக்கும் நிலையகன்று
ஒற்றுமையாய் யாவருமே வாழ்ந்திட வேண்டும் !
பெருமை மிக்க எங்கள் நாட்டின் நற்பெயரை
பாரினிலே மீண்டும் நிலை நிறுத்திட வேண்டும் !

☆ ☆ ☆

சிங்களவர், தமிழரோடு முஸ்லிம், பேகர்
சொந்த மண்ணில் உரிமையோடு வாழ்ந்திட வேண்டும் !
சிங்களமும் , செந்தமிழும் இந்த மண்ணிலே
சகோதர மொழிகளாய் கரும மாற்றிட வேண்டும் !
திங்கள் போயா தினத்தில் வானில் ஒளிர்வது போலே
எங்கள் நாட்டில் சமாதான ஒளிவர வேண்டும் !
பொங்கல் நாளில் பால் பொங்கி வழிவது போலே
எங்கள் நாட்டில் அமைதி பொங்கி வலிந்திட வேண்டும் !

☆ ☆ ☆

இன பேதம் , மொழி பேதம் கொண்டு நாங்கள்
இங்கு வாழ்தல் அறிவீனம் உணர்ந்திட வேண்டும் !
இனங்கள் நான்கு வாழுகின்ற அன்னை நாட்டில்
எல்லோரும் சோதரர்களாய் வாழ்ந்திட வேண்டும் !
மனதினிலே தேங்கி நிற்கும் சாக்கடைகளை
மதங்கள் கூறும் நெறிமுறையால் அகற்றிட வேண்டும் !
மனிதனாக யாரும் இங்கு வாழ்ந்திட வேண்டில்
மனித உரிமை மீறல்கள் ஒழிந்திட வேண்டும் !

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை வாசி உயர்வாலே வாதை படுவது
வீண் சண்டை செய்வது தான் ஏற்றிட வேண்டும் !
இளைஞர் சக்தி அழிவிற்கு பயன்படுவது
இந்தக் கொடிய யுத்தம் தான் உணர்ந்திட வேண்டும் !
பிழையான பாதை தனில் பயணம் செய்வது
போர் செய்யும் மாயம் தான் புரிந்திட வேண்டும் !
விலையில்லா மனித உயிர்கள் வீணில் அழிவதும்
வெட்டிச் சண்டை செய்வது தான் விளங்கிட வேண்டும் !

☆ ☆ ☆

வருங்கால சந்ததிகள் வாழும் வகையிலே
வளமான தேசத்தை ஆக்கிட வேண்டும் !
வருங்காலம் எமைப் போற்றும் வழி வகையிலே
வரலாற்றுத் தீர்வொன்று கண்டிட வேண்டும் !
வரலாறு எமைத் தூற்றும் வழி வகையிலே
வீண் யுத்தம் தொடராமல் இருந்திட வேண்டும் !
ஒரு காலம் வர வேண்டும் முன் போலவே
எதிர் காலம் அது கண்டு மகிழ்ந்திட வேண்டும் !


☆ ☆ ☆

பிரிவினைகள் பேசு கின்ற பிறந்த மண்ணிலே
புரிந்துணர்வு மக்களிடம் பெருகிட வேண்டும் !
புரிந்துணர்வு குறைந்து போனதினாலே
பகையுணர்வு வளர்வதை உணர்ந்திட வேண்டும் !
'இரு மொழிகள் ஒரு நாடு' என்று சொல்வார்
'ஒரு மொழி இரு நாடு' ஏற்றிட வேண்டும் !
ஒரு மனதாய் ஒன்று கூடி என்றும் நாங்கள்
எமது தேச எழுச்சிக்காய் உழைத்திட வேண்டும் !

☆ ☆ ☆


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடிக் கல்லறை




கவிஞன்
தேனான்.
தேடித் தேடி
ஓடினான்.

பிறகு -
ஏதோ
புரிந்து கொண்டவனாக
கல்லறைக்குள்
கண்களை விட்டான்.

உள்ளே -
மனிதமும் சமாதானமும்
உயிரோடு
ஊசலாடிக்
கொண்டிருக்கின்றன.


கண்களில் வடியும்
கண்ணீரைத் துடைத்தபடி
கவிஞன்
கரத்தில் ஏந்தினான்
பேனாவை.
கண்ணாடிக் கல்லறையை
உடைத் தெறிவதற்கு !

**ஜனனி**
**08-06-1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு மேதினம் இப்படித்தான் .....



வண்ண வண்ணத் தோரணம்
வீதியெங்கும் ஊர்வலம் !
'கலர் கலராய்' கட்சிகள்
கட்சிக்குள்ளும் கட்சிகள் !

பாரம் பரிய கலைகளும்
அபிவிருத்தித் திட்டமும்
பாதையெங்கும் பவனிவர
போதையோடு தொண்டர்கள் !

வீதியிலே நடனமும்
விதம் விதமாய் சுலோகமும்
வானையெட்டும் கோசமெழ
ஏமாளிகளாய்
தொழிலாளர்கள்!

பூக்களின் தினத்திலே
புகழாரம் வண்டுக்கு !

கட்சிக்காக ஆறு பேர்
காசுக்காக நூறு பேர்
கடமைக்காக ஆறு பேர்
கள்ளுக்காக நூறு பேர்
சோற்றுக்காக சேருவோர்
ஆயிரம்தான் கூறுவார் !

இத்தனையும் சேர்ந்துதான்
மேதினத்தின் ஊர்வலம் !

ஊர்ந்து சென்ற ஊர்வலம்
மைதானம் சேருமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலே தலைவர்கள்
தம் பெருமைகள் பேசுவார் ...... !
ஊழியர் சம்பளம்
உயர்வு பற்றி பேசுவார் ..... !
அவர்
உரிமைப் பற்றி பேசுவார் ..... !

ஆனால்
வேதனத்தைக் கூட்டுமுன்
விலையுயர்வை கூட்டுவார் !

உரிமைகள் கோரினால்
குரல்களையே நசுக்குவார் !

அவரது ஆட்சியை
இவரும் சாடுவார் !
சாடுபவர் வந்தாலே
அதையே தான் நாடுவார் !

ராமன் ஆண்டாலும்
ராவணன் ஆண்டாலும்
இங்கு
சிலருக்குக் கவலையில்லை !

உழைத்து உழைத்து
இளைத்துப் போகும்
பாட்டாளிக்கு விடிவுமில்லை !

# எப்போது இறந்தாய் ?

ஓ .....
என் தேசமே
உனக்கு என்ன நடந்தது ?

ஓ ......
என் அன்னையே
உனக்கு என்ன நடந்தது ?

ஒரு பக்கம்
யுத்தப்பிணி ?
மறு பக்கம்
மனிதாபிமானம் மறந்த
மனிதர்களின் மிலேச்சத்தனம் !
சிறுவர் துஷ்பிரயோகம் !
பாலியல் வல்லுறவுகள் !
படு கொலைகள் !
பகல் கொள்ளைகள் !
ஆட்கடத்தல்கள் !

உனக்குள் எப்படி
இத்தனை நோய்கள் வந்தது ?
நீ எப்போது
இறந்து போனாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிடு தோழா !

தோழா !
உன்னில் இருந்த
மனிதத்தை
எப்படித் தொலைத்தாய் ?

நிலவுக்குள்
சூரியனை
புகுத்திவைக்க
எப்படி உனக்கு
மனம் வந்தது ?

மலருக்குள்
விஷம் வைக்க
சொல்லிக் கொடுத்தது யார் ?
சொல்லிக் கெடுத்தது யார் ?

நீ
நானாய் இருந்த போது
நான்
நீயாய் இருந்தேன்.

இப்போது
நீ
நானாக இருக்கவில்லை.
அதனால்
நான்
நீயாக இருக்க
விரும்பவில்லை!

தோழா
யோசித்துப் பார் !

அன்று
சமூகச் சாக்கடைகளை .....
அரசியல் அசிங்கங்களை .....
மூட நம்பிக்கைகளை .....
சுட்டுப் பொசுக்க
நாங்கள்
பேனா முனையில்
தீவைத்து
துரத்தித் துரத்தி ஓடியதை.

இன்று
புரிகிறது.
நீ
துரத்தவில்லை.
ஓடிவிட்டாய்
அவைகளோடு ...... !

தோழா
வந்துவிடு !

இங்கே
எமக்கு
நிறைய வேலையிருக்கிறது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதா நீ தேடுவது .....

நெருப்புப் படிந்த
சிவப்பு பூமியில்
நான்
மனிதத்தைத் தேடுகிறேன்.

கறுப்பு பூதமாய்
இரத்த விழிகளோடு
என் முன்னே
உருவம் ஒன்று
அருவமாய் .....
தோன்றித் தோன்றி
மறைகிறது !

சாம்பரையும்
எலும்புக் கூடுகளையும்
போர்த்திக் கொண்ட
இந்த
மண் சுடுகிறது !

தேகத்தைத் தொட்ட
தென்றலிலிருந்து
இரத்தம்
கசிகிறது .....

காடு, மேடு
வயல், நதி
மலை, கடல் .....
இன்னும்
எங்கெங்கோ சென்று
நான்
மனிதத்தைத் தேடுகிறேன்.

தேடித் தேடி
தேய்ந்து போய்
ஒதுங்குகிறேன்
கல்லறை அருகில் !

அதில்
ஒரு வாசகம்.
"மனிதா !
நீ
தேடும் மனிதம்
எங்கேயும் இல்லை.
எனக்குள் தான்
அடக்கம்
செய்யப்பட்டிருக்கிறது
உயிரோடு !"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்

கண்கள்
வெளியேற்றும்
கழிவு !

◉ ◉

பெண்களின்
ஆயுதம் !

◉ ◉

சிறுவர்களின்
பாதுகாப்புக் கவசம்
சாதிக்கும் சக்தி !

◉ ◉

மனச் சுமைகளை
குறைக்கும்
மருந்து !

◉ ◉

இதய வேதனையின்
இரத்தக் கசிவு !

◉ ◉

போலி மனிதர்கள்
அணியும்
மூக்குக் கண்ணாடி !

◉ ◉

விழி வானம்
துன்பத்திலும்
ஆனந்தத்திலும்
சிந்தும்
மழை !

## தேர்தல் வருகிறது

சுவர்களில் எல்லாம்
‘ போஸ்டர் ’ கள் பூக்க
மக்களை நாடி
தலைவர்கள் போக
வாக்காளர் வாக்கை
வேட்பாளர் போட
இறந்தவர் எழுந்து
ஓட்டுப் போட
பாதைகள் எல்லாம்
புது மெருகேற
சந்திகள் தோறும்
மேடைகள் போட
மேடையில் சில பேர்
பலர் குறை பாட
மது போதையில் பல பேர்
தம் புகழ் பாட
தேர்தல் வருகிறது !
தேர்தல் வருகிறது !

**வீரகேசரி**
**28 - 02 - 1999**

## விடியல்

சூரியன்
ஆடை கலைந்தான்.
இரவு மகள்
வெட்கப்பட்டு
மெதுவாக மறைந்து
கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு பல மனிதர்கள் இப்படித்தான்

இதயத்தை
இயந்திரமாக்கிக்
கொள்வார்கள் !

☺

வாழ்க்கையின்
விலாசத்தை
வீணாய் தொலைப்பார்கள் !

☺

சுய நல அழுக்கை
சுகந்தமென
சுமப்பார்கள் !

☺

தனது
முகத்தை
மறந்து விட்டு
மற்றவர் முகத்தை
பரிசீலிப்பார்கள் !

☺

ஆயிரம் பூக்கள்
பூத்திருக்க
காகிதப் பூக்களுக்காக
அலைவார்கள் !

☺

இழக்கப் போவதை
மறந்து விட்டு
இழந்ததை நினைத்தே
கவலைப்படுவார்கள் !

☺

வாழ்க்கைப் புத்தகத்தை
பொழுது நெருப்பால்
கொளுத்தி
சந்தோஷக்
குளிர்காய்வார்கள் !

☺

முன்னோர்களுக்கு
புகழ் மாலை சூடியே
வருங்கால சந்ததிக்கு
நிகழ் கால நாட்களில்
எதுவும் செய்யாமல்
போவார்கள் !

☺

கனவுகளில்
விழித்து
கனவுகளில்
லயித்து
கனவுகளில் வாழ்ந்து
கனவாய்ப் போவார்கள் 1

☺

விழித்துக் கொண்டே
தூங்குவார்கள்
தூங்கிக் கொண்டே
விழிப்பார்கள் !

☺

ஆனால்
விழித்திருப்பது
விழிகள்தான்
அவர்கள் அல்ல !

☺

**வீரகேசரி**
**22 - 12 - 1996**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி



ஒலியை
செவிக் கருவியில்
செலுத்தி
மனக் கண்ணில்
காட்சிகளைக் காட்டும்
மாயா ஜால வித்தைக்காரன் !

✧ ✧ ✧

வானலை வழியே
வந்து
காதுப் பூக்களில்
ரீங்காரமிடும் வண்டு !

✧ ✧ ✧

பொழுதை நகர்த்த
உதவும்
விசை !

✧ ✧ ✧

தனிமைக்கு
இனிமையான
நண்பன் !

✧ ✧ ✧

காற்று
நுழையாத
இடத்தில் கூட
புகுந்து விடும்
ஒற்றன் !

✧ ✧ ✧

வார்த்தை ஜாலத்தால்
குப்பையைக் கூட
விற்க உதவும்
பிரசாரகன் !

✧ ✧ ✧

பிறப்பை வாழ்த்தாக்கி
இறப்பை அறிவித்தலாக்கி
பணமீட்டும்
வியாபாரி !

✧ ✧ ✧

பார்வையற்றவர்கள்
வாசிக்கத் தெரியாதவர்கள்
அறிவு பெறும்
கேள்விப் புத்தகம் !

✧ ✧ ✧

நாட்டு நடப்பையும்
உலக நடப்பையும்
வீட்டுக்குள்
வந்து சொல்லும்
புறங்கூறி !

✧ ✧ ✧

பல வேடங்களில்
நடிக்கும்
சிறந்த நடிகன் !
குரல்கள் மட்டும் நடிக்கும்
திறந்த மேடை !

✧ ✧ ✧

சில
இடங்களில்
அடுத்தவர்
நிம்மதியைக் கெடுக்கும்
குறும்புக்காரன் !

ஜனனி

06 - 10 - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளிகள்

## மனிதன்

மனிதன்
ஒரு வனம் !
எல்லா மிருகங்களும்
வாழும் கூடு
அவன் மனம் !
குரங்கு போல் தாவும்
அவன் குணம் !
விலங்கு போல்
கூட்டம் கூட்டமாய்ப் பிரியும்
அவன் இனம் !
சிங்கம் போல்
வேட்டையாடுவான்
அது பணம் !
ஒரு நாள் இறப்பான்
அப்போது அவன் பிணம் !

## இன்பம்

வண்டுக்கு பூக்களில் இன்பம்
கண்ணுக்கு காட்சியில் இன்பம்
பாட்டுக்கு இசையில் இன்பம்
நாட்டுக்கு ஒற்றுமை இன்பம்
தாய்க்கு குழந்தையில் இன்பம்
நோய்க்கு மருந்தினில் இன்பம்
இரவுக்கு நிலவினில் இன்பம்
இளமைக்கு காதலில் இன்பம்
வயதுக்கு வளர்ச்சியில் இன்பம்
வாழ்க்கைக்கு இலட்சியம் இன்பம்

**வீரகேசரி**
**10 - 01 - 1999**

## அபூர்வம்

குப்பைக்குள்
குண்டு மணி
கிடைக்கலாம் !
ஆனால்
குண்டு மணிகளெல்லாம்
குப்பையில் இருப்பதில்லை !

**தினகரன்**
**11 - 07 - 1993**

## காதல்

பனித்துளி போல்
புனிதமானது !
விஷத்துளி போல்
ஆபத்தானது !
தென்றலைப் போல்
இதமானது !
புயலைப் போல்
கொடுமையானது !

**வீரகேசரி**
**14 - 02 - 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவே !

வான மகள்பொட்டு வைக்க நீ பிறந்தாயே
வஞ்சியர்கள் முகமெடுத்து நீ சிறந்தாயே
நாணம் கொண்டு மேகத்திரையில் நீ மறைந்தாயே
நாணம் கொள்ள யாரை நீ கண்டுகொண்டாயோ ?

❍ ❍ ❍

விண்ணின் செடியில் மலரெனவே பூத்து நின்றாயே
வண்டென விண்மீன்கள் சூழ காத்து நின்றாயே
மண்ணிலுன் முகம் பார்க்க விண்ணில் நின்றாயே
மாதத்தில் சில நாட்கள் ஏன் மறைவாயோ

❍ ❍ ❍

கவிஞரெல்லாம் போற்றுகின்ற அழகைப்பெற்றாயே
காதலருக்கு சாட்சி சொல்லும் வரத்தைப் பெற்றாயே
புவியினழகை இரவில் காண ஒளியை தந்தாயே
பிள்ளை யழுகை ஓயுமுன்னை கண்டபின் தானே !

❍ ❍ ❍

அந்தரத்தில் தோரணமாய் காட்சி தந்தாயே
இருண்ட வானை யிரவில் நீ ஆட்சிசெய்தாயே
மந்திரத்தில் உனை யாரோ செய்து வைத்தாரே !
மாந்தரெல்லாம் பயன் பெறவே உயர வைத்தாரே !

❍ ❍ ❍

ஓய்வு தேடி பகலில் நீயும் எங்குசெல்வாயோ ?
ஆதவனும் நீயும் உலக சேவகர் தானோ ?
தேய் பிறையாய் வளர் பிறையாய் வாழ்க்கைக் கண்டாயே
தரணியிலே மனித வாழ்வை உணர்த்தி நின்றாயே!

❍ ❍ ❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படுங்கள்

லயத்து
வாழ்க்கையில்
லயித்துப் போனவர்களே !
உங்களுக்கு
வெளியே
வாழ்க்கையென்று
ஒன்று
இருக்கிறது.
உணர்ந்து
கொண்டீர்களா ?

உங்களது
'காம்பராக்கள்'
உங்களை
உலகத்திலிருந்து
பிரித்து
அடைத்துவைத்திருக்கும்
சிறை கூடங்கள் !

புறப்படுங்கள்
விடியலைத்தேடி !

அது
எங்கேயும்
இல்லை.

உங்கள்
முன்னால்தான்
இருக்கிறது.

ஆனால்
நீங்கள் தான்
பூமிக்குள்
தேடிக்கொண்டு
இருக்கிறீர்கள் !

நீங்கள்
மலைகளை
மட்டும்
வாழ்க்கை எனக்
கொண்டதால் தான்
உங்கள்
வாழ்க்கையே
மலையாகக்
கனக்கிறது.
புறப்படுங்கள்
விடியலைத்தேடி !

நாட்டின்
எட்டுத்திசையும்
உங்கள்
கால்கள் பதியட்டும் !

வாழ்க்கையை
கற்றுக்கொண்டு
வாழ்வதற்கு
கற்றுக்கொண்டு
திரும்புங்கள் !

அப்போது
விடியல்
உங்களோடு
புறப்படும் !

வீரகேசரி
28 - 03 - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு ஜீவன்களை போத்தலுக்காக விற்காதே

மலையகமே !
இது தேர்தல் காலம்
உனக்கும் பிடிக்கும்
தேர்தல் ஜுரம் !

உனது
வாக்கு ஜீவன்களை
சாராய போத்தலுக்காக
சாக்கடையில்
போட்டு விடாதே !

இன்று -
உனக்கு
போதையை ஏற்றிவிட்டு
நாளை அவர்கள்
பதவி போதையில்
போய்விடுவார்கள் !

அப்போது -
நாளைய நாளைகளில்
நீ
அவர்கள் போகும் பாதையில்
தூசாக இருப்பாய்.

மலையகமே !
உனது வரலாற்றின்
கடந்த கால
பக்கங்களைப் புரட்டிப்பார்.

இரத்தத்தால் எழுதப்பட்ட
வரிகளிலிருந்து
உலகத்தைப்படி.

அதன்
ஒவ்வொரு எழுத்திலும்
நீ
உன்னையே இழந்திருப்பது
உனக்குப் புரியும்.

நீ
இழந்து விட்ட
உன்னை அடைய .....
நீ வாழ்வதற்கு
உரிமைகளை அடைய .....
உனது வாக்குகளை
ஓரணியில் ஒன்று திரட்டு.

இப்போது -
உனக்குள் இருக்கும்
இதயங்களுக்கு
சொல்லிக் கொடு.

இருளுக்குள் இருக்கும்
அவர்களின் விடிவிற்காக
ஒளியை ஏந்திவரும்
மனிதம் வாழும்
மனிதர்களுக்கு
ஓட்டுப் போடும் படி !

**வீரகேசரி**

**25 - 04 - 1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுதங்கள்

கானகத்தில்
வேடுவர்கள் ஆயுதம் வில் !
இலக்கியத்தில்
கவிஞர்கள் ஆயுதம் சொல் !
ஆர்ப்பாட்டத்தில்
சிலரின் ஆயுதம் கல் !
போர்க்களத்தில்
வீரர்கள் ஆயுதம் 'ஷெல்' !
சமிபாட்டில்
வாயின் ஆயுதம் பல் !
உலகத்தில்
பயங்கரமான ஆயுதம்
இவை எவையுமில்லை.
நா ஒன்றேதான்
அதைக்காத்து நில் !

## மழை

வானத்தின்
அழுகை !
பூமியின்
குளிப்பு !

## இளமை

வாழ்க்கைப் புத்தகத்தின்
வசந்தப் பக்கங்கள் !
நினைவலைகளின்
இனிய சுவர்க்கங்கள் !

## நேரியமா மனிதனே ?

ஓ .....
ஆணவ மனிதனே !
நீ
பதவி நாற்காலியில்
பகட்டாய் அமரும் போது
அதன் கீழே
மனிதாபிமானம்
நீதி, நேர்மையையும்
அல்லவா
குழி தோண்டிப் புதைத்து
விடுகிறாய் !

உனது திறமை
உன்னை
உயர்ந்த நிலைக்கு
இட்டுச் செல்லலாம் !
ஆனால் - உனது
நன்நடத்தைகளும்
நற்பண்புகளும் தான்
நீ
வீழ்ந்துவிடாமல் காக்கும்
நல்ல துணைகள் என்பது
உனக்குத் தெரியுமா ?

## மரணம்

ஒரு
கனவின்
முடிவு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வருமெனக் காத்திருப்போம்



தேயிலைக் கொய்தே எமைத் தேய்த்தோம்
தேவைகள் மட்டும் தீரவில்லை
தேயிலைத் தரத்தை உயர்த்தி விட்டோம்
வாழ்க்கைத் தரமோ உயரவில்லை !

❀ ❀ ❀

உழைத்து உழைத்து களைத்து விட்டோம்
உயர்வுக் கேனோ வழியில்லை
மலை முகடெல்லாம் எமை இழந்தோம்
மகிழ்ச்சி மட்டும் சேரவில்லை !

❀ ❀ ❀

நாட்டிற் கெம்மை அர்ப்பணித்தோம்
நாட்டி லெமக்கு மதிப்பில்லை
ஓட்டுப் போட்டே ஓய்ந்து விட்டோம்
உரிமைகள் மட்டும் கிடைக்கவில்லை !

❀ ❀ ❀

விடியு முன்பே மலைக்குச் செல்வோம்
வாழ்க்கை மட்டும் விடியவில்லை
குடிசையிலேயே வாழ்ந்து விட்டோம்
குடிசைகள் கோபுர மாகவில்லை !

❀ ❀ ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக் குறிபோல் ஆகிவிட்டோம்
குனிந்த முதுகு நிமிரவில்லை
வாழ்வில் பலதை இழந்து விட்டோம்
வாழும் வகையோ புரியவில்லை !

❀ ❀ ❀

நாட்டி(ன்) அபிவிருத்தியில் பங்கு கொண்டோம்
நாங்கள் விருத்தியைக் காணவில்லை
கண்ணீரை சுமந்தே வாழ்ந்து விட்டோம்
காலம் வருமெனக் காத்திருப்போம் !

❀ ❀ ❀

வீரகேசரி
11 - 07 - 1993

## மொழி

மொழி என்பது
கருத்தை
பரிமாறிக் கொள்ளவே !
வெறுப்பை
வளர்த்துக் கொள்ள அல்ல !

தினகரன்
29 - 08 - 1993

## வெற்று மனிதர்கள்

பாதையைத் தொலைத்து விட்டு
பயணம் போவார்கள்.
இலட்சியம்
இல்லாதவர்கள் !

## பூக்கள்

செடியில் பூப்பது பூ
திரியில் பூப்பது நெருப்பு
முகத்தில் பூப்பது சிரிப்பு
இதயத்தில் பூப்பது அன்பு

வீரகேசரி
07 - 02 - 1999

## தென்றலும் புயலும்

சந்தோசத் தென்றல்
நெஞ்சைத் தொடும்
சந்தேகப் புயல்
வீசாதவரை !

தினகரன்
24 - 10 - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வரும் விடிவு

மலையகத்தின்
நாளைய தூண்களே !
நீங்கள்
சுமந்து செல்லும்
புத்தகக் கட்டுக்களில்
இருப்பது
பாடங்கள் மாத்திரம் அல்ல ....

நாளைய நாளைகளில்
உங்களது சுமைகளை
இல்லா தொழிக்கும்
அறிவியல் இயந்திரங்களை !

வாழ்வியல் ஈனங்களையும்
மானிட சோகங்களையும்
பேசிப் பேசியே
நீங்களும்
தேய்ந்து போக வேண்டாம் !

உங்களது
முன்னோர்களின்
முன்னேற்றத்தில்
முட்டுக் கட்டையாக இருந்தது
அது தான் !

பூக்கள் அற்ற செடிகள்
அழகு கொள்வதில்லை
கல்வியற்ற சமுதாயம்
உயர்ச்சியடைவதில்லை !

ஏந்துங்கள்
அறிவியல் இயந்திரங்களை !
தகர்த்தெறியுங்கள்
முட்டுக்கட்டைகளை !

அப்போது
விடிவைத் தேடி
நீங்கள்
போகவேண்டியதில்லை !
அது
உங்களைத் தேடி வரும் !

**வீரகேசரி**
**11 - 07 - 1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் பெருமை உயர்ந்து விடும்

தாயே என்னைத் தடுக்காதே
தோட்டத்துக் கென்னை அனுப்பாதே !
தாயே என்னை கற்க விடு
தரணியில் எம் நிலை உயர்த்தவிடு !

❀ ❀ ❀

மலைக்குள் என்னை மறைக்காதே
மடமை எண்ணத்தை விதைக்காதே !
நிலைக்கும் கல்வியை கற்கவிடு
நாளைய உயர்வுக்கு வழியைவிடு !

❀ ❀ ❀

எம்மைத் தேய்த்தே வாழுவதா ?
இங்கே வீணாய் வீழுவதா ?
நம்பி இனியும் பயனில்லை
நாங்கள் உயர்ந்தால் தடையில்லை !

❀ ❀ ❀

நாட்டில் எமக்கு மதிப்பில்லை
நாங்கள் இங்கே மனிதரில்லை !
வாட்டிடும் ஏழ்மையும் மாறவில்லை
வழிகளை இன்னும் காணவில்லை !

❀ ❀ ❀

கூடையை சுமந்தது இனிபோதும்
கல்வியை நினைப்போம் இனிமேலும் !
மூடிய கதவுகள் திறந்துவிடும்
மண்ணின் பெருமை உயர்ந்துவிடும் !


❀ ❀ ❀

**வீரகேசரி**
**25 - 07 - 1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைந்து ஓடும் மலைநாடு




இயற்கை அன்னையின் அரவணைப்பில்
உறங்கிக் கிடக்கும் மலை நாடே
உயர்வு தன்னை இன்னும் காணா(து)
அயர்ந்து கிடக்கும் கலை நாடே
துயரத்தை மட்டும் தன்னில் சுமந்து
தேசத்தை யுயர்த்தும் (தே)இலை நாடே !

❋ ❋ ❋

மனதில் சுமைகள் நிலைத்தாலும்
மண்ணில் பசுமை மிளிர் நாடே
தனித்தே யுன்னைப் பார்த்தாலும்
தேயிலைத் தரத்தில் தனி நாடே
கனவுகள் கண்டே வாழ்ந்தாலும்
காலத்தை வெல்லும் எம் நாடே !

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் பலதை இழந்தாலும்
இந்த மண்ணில் உயர் நாடே
பெருமைகளின்றி இருந்தாலும்
பொருளாதாரத்தின் உயிர்நாடி
வறுமை வாழ்வை வதைத்தாலும்
வளங்கள் மிக்க வள நாடே !

❄ ❄ ❄

ஓட்டுப் போட்டே ஓய்ந்தாலும்
ஒட்டிய வயிறு காண் நாடே
நாட்டுக் காகத் தேய்ந்தாலும்
நீயோ தனித்த தேன் நாடே ?
வாட்டும் சோதனை மிகைத்தாலும்
வளைந்து ஓடுது மலை நாடே !

❄ ❄ ❄

## தனியார் மருத்துவமனை

இங்கே
வயிற்றுவலிக்கு
வைத்தியரை
நாடுவோர் கூட
'ஹார்ட் அட்டேக்' கையும்
'போனஸ்' நோயாய்
பெற்றுக் கொண்டல்லவா
பயத்தோடு வெளியே
பாய்ந்தோடுகிறார்கள்.
டாக்டரின் 'பீஸை'க் கேட்டு !

## திருமணம்

ஒருமை
ஓரங்கட்டப்படுகிறது.
பன்மை
பதவிக்கு வருகிறது !

## கர்வம்

தன்னைத்தானே
உயர்வாக நினைப்பவன்
தலைகீழாக
நிற்கின்றான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தை சுமக்கும் இதயங்கள்

அறிவகமே !
உன்னில்
நாம்
அறிவுத் தேன்
அருந்திய
இனிய நாட்களுக்கு
விடைகொடுக்கப் போகிறோம்.

கலாசாலையே !
எங்கள்
கண்களில் வடிவது
கண்ணீர் அல்ல !
பிரிவுத் துயரால்
இதய வேதனையில்
இருந்து வடியும்
ரத்தத்தின்
சுத்திகரிப்பு !

அறிவின் அன்னையே !
நாங்கள்
இன, மத, மொழிக்கு
அப்பால்
மானிடத்தைப்
புரிந்து கொண்டது
உனது
மடியில் தான்.

நிமலும், குமாரும்
முகம்மதும், லூகஸ்ும்
கூடி அமர்ந்து
அரட்டை அடித்ததும்
உண்ணும் உணவை
பருகும் தேனீரை
கொடுத்து மகிழ்ந்ததும் .....

அந்த -
திறந்த மைதானத்தில்
விளையாடி நின்றதும் .....
வருடந் தோறும்
சுற்றுலா சென்றதும் .....
கன்னியரை காளையரும்
காளையரை கன்னியரும்
சீண்டிப் பார்த்ததும் .....
'காதலுக்குத் தேவை
இதயங்கள் மாத்திரமே'
என்ற கோட்பாட்டை
யதார்த்த மாக்கியதும் .....
உன்னிடத்தில் தானே !

இனியும் வருமா
அந்த
இனிய நாட்கள் !

UNIVERSITY OF PERADENIYA
2003-5-20
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் சோலையே !
பசுமை நிறைந்த
எம் நினைவுகளை
நாம்
உன்னில்
விட்டு விட்டுப்
போகவில்லை.
எம் நெஞ்சங்களில்
அவைகளை எல்லாம்
ஓவியமாய்
தீட்டிக் கொண்டுப்
போகிறோம்.

இந்த
தேசத்தின்
எட்டுத் திசையில்
இருந்தும்
சிட்டுக் குருவி போல்
பறந்து வந்து .....
உன் சோலையில்
கூடு கட்டி
வாழ்ந்து விட்டு
இந்த தேசத்தின்
விடியலுக்காக
பறந்து செல்லப்
போகிறோம்.

எங்கள்
பெயர்களுக்குப் பின்னால்
ஒட்டிக் கொண்டிருக்கும்
எழுத்துக்களைப் போல்
எம்
இதயங்களில்
நீயும்
ஒட்டிக் கொண்டு இருக்கிறாய்.

அன்னையே !
எங்கள்
கண்களை
சற்று துடைத்துவிடு.

எங்கள்
இதயங்களுக்கு
கொஞ்சம் ஆறுதல் கூறு.

நாங்கள்
இனி
இருட்டுக்குள்
நடக்கப் போகிறோம் !

**கொழும்பு பல்கலைக்கழக வர்த்தக, முகாமைத்துவ மாணவர்கள் (1986-1987ம் கல்வி ஆண்டு) தமது கற்கை நெறியை பூர்த்தி செய்த பின் வெளியிட்ட *(GOING DOWN)* பிரியாவிடை நினைவு மலருக்காக எழுதப்பட்ட கவிதை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிக் கவிதைகள்

## எது வரை ?

இரவு என்பது
விடியும் வரை
உறவு என்பது
முடியும் வரை
வேசம் என்பது
நடிக்கும் வரை
பாசம் என்பது
இறக்கும் வரை
கற்பு என்பது
இழக்கும் வரை - சிலர்
நட்பு என்பது
இருக்கும் வரை !

## பள்ளி நாட்கள்

முதுமை வந்து
முதுகைத் தட்டினாலும்
என்றும்
இளமையாக காட்சியளிக்கும்
இனிய நாட்கள் !

## புதிர்

இதயம்
ஒரு இருட்டறை !
உள்ளே இருப்பது
உரியவருக்கும்
தெரியாது !

## நிலவு

வெள்ளி நாணயத்தை
வானத்தில்
யார் வீசியது ?

## ச(மி)த்ரு

உனக்கு
எதிரிகள்
இருக்க வேண்டும்.
நீயாக முன்னேற !

**தினகரன்**
**05 - 09 - 1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய இதயங்களை சூரியனாக்காதே !




& *Sham*

ஓ .....
நாகரிக நங்கையே !
உன்
மேனிப் புஷ்பம்
விழி வண்டுகளால்
மேயவிடப்படுவது
நாகரிகத்தின்
எந்தப்பக்கத்திலிருந்து ?

நீ
குறைத்திருப்பது
ஆடைகளையோ
கூந்தலையோ
அல்ல !
உன்னை !

சூர்யக் கதிர்கள்
தொட்டுத் தெறிக்கும்
உன்
தேக நிலவால்
நீ
வாலிப இதயங்களை
சூரியனாக்காதே !

பிறகு
சுட்டெறிவது
உன்
கற்புதான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதனின் அழைப்பு

என்
இலட்சியக் குதிரை
ஓடாது தடுக்க
ஒன்றாய் கூடியிருப்பவர்களே!

புரிந்து கொள்ளுங்கள் !
உங்கள்
தடைகள் தான்
என்
வெற்றிக்கான
விடைகள் !

என்
மடியில் கனமில்லை.
அதனால்
வழியில் பயமில்லை !

ஆனாலும்
கனமிருப்பதாக
எண்ணிக் கொண்டு
உங்கள் கணங்களை
செலவிட்டுக்
கொண்டிருக்கிறீர்கள் !

அடுத்தவர் தோட்டத்து
புல்லைக் கூட
ஆராயும் நீங்கள்
உங்கள் தோட்டத்து
ரோஜாவைக் கூட
கவனிப்பதில்லையே !

பூக்கும்
பூக்களெல்லாம்
பூஜைக்குப் போவதில்லை.

கூந்தலுக்கு சில பூக்கள்
கழுத்துக்கு சில பூக்கள்
காயாகும் சில பூக்கள்
கண்காண சில பூக்கள்

மனதிற்குச் சில பூக்கள்
மரணத்திற்குச் சில பூக்கள்
உதிரியாக சில பூக்கள்
உதவாத சில பூக்கள்

மனிதர்களும் அப்படித்தான் !
நீங்கள்
எப்படி ?

கனிந்த
மரத்திற்குத்தான்
கல்லடி விழும்
துணிந்த மனதுக்குத்தான்
சொல்லடி விழும் !

கூக்குரல்கள்
கீதமாவதும் இல்லை
நல்ல
வாதமாவதும் இல்லை !

முகத்துக்கு முன்னால்
மலரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகுக்குப் பின்னால்
முள்ளையும்
நீட்டுபவர்கள்
மனிதர்கள் அல்ல !

ரோஜா செடியில்
முள் கூட
தெரியும் படியாகத்தான்
இருக்கிறது.

சில
மனித
மனங்களைப் போல்
மறைவாக அல்ல !

அதனால்
மனிதர்களே
வாருங்கள் !
முகத்துக்கு
முன்னால் வாருங்கள்.

முதுகுக்குப்
பின்னால்
நீங்கள் கோழைகள் !

# நிலவு இரவில் வானம்

அங்கே
வான மைதானத்தில்
மேக நடுவர்கள்
மத்தியஸ்த்தம் வகிக்க
நிலவுப் பந்தெடுத்து
நட்சத்திர வீரர்கள்
கிரிக்கட் விளையாடுகிறார்கள் !

இங்கே
பூமி மண்டபத்தின்
காகித அறையில்
பேனா ஒலிவாங்கியில்
கவிதை வானொலிக்கு
அறிவிப்புக் கவிஞர்கள்
வர்ணனை வடிக்கிறார்கள் !

வாசக நேயர்கள்
கவிதை வானொலியிலேயே
தொலைக்காட்சியும்
பார்த்துக் கொள்கிறார்கள் !

**'ரோஜா' - வாரமஞ்சரி**
**01 - 10 - 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் யார் தெரியுமா ?

இரவில் மட்டும்
ஒளிரும்
மின் மினிப் பூச்சுக்கள்
அல்ல
நாங்கள் !

ஃஃ

விளக்கில் விழுந்து
தற்கொலை
செய்து கொள்ளும்
ஈசல்கள் அல்ல
நாங்கள் !

ஃஃ

காக்காய்க் கூட்டில்
களவாய்
முட்டையிடும்
குயில்களும் அல்ல
நாங்கள் !

ஃஃ

தன் இனத்தையே
உண்ணும்
மீன்களும் அல்ல
நாங்கள் !

ஃஃ

மலர் விட்டு
மலர் தாவும்
வண்டினம் அல்ல
நாங்கள் !

ஃஃ

நிலவை மறைக்கும்
மேகங்களும் அல்ல
நாங்கள் !

ஃஃ

தென்றலாய் வந்து
புயலாகவும் வந்து
இருமுகம் காட்டும்
காற்றும் அல்ல
நாங்கள் !

ஃஃ

இதயத்தை
இயந்திரமாக்கி
மனிதத்தை மறந்த
மனிதர்களும் அல்ல
நாங்கள் !

ஃஃ

மனிதன் மனிதனை
தூற்றுவதும்
போற்றுவதும்
எங்கள் பெயர்
சொல்லித்தான் !

ஃஃ

ஆம் !
நன்றிக்கு
இலக்கணம் வகுத்த
நாய்கள் தான்
நாங்கள் !

ஃஃ


**ஜனனி**

**06 - 10 - 1996**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்





ஏழையின்
உணவு !
செல்வந்தரின்
கனவு !

* * *

பல
இதயங்களை
இயந்திரமாய்
இயக்கும்
எரிபொருள் !

* * *

பலருக்கு
பெற்றோரை
சகோதர சகோதரிகளை
சொந்த பந்தங்களை விட
நெருங்கிய
உறவு முறை !

* * *

வாழ்க்கையின்
குறிக்கோள் !

* * *

உலகத்தின்
இயக்கம்

* * *

குமரிப் பெண்களை
யன்னல் கூண்டுக்குள்
அடைத்து
திருமண சுதந்திரம்
வழங்காது
அடக்கியாளும்
ஆட்சியாளன்

* * *

இல்லாதவனுக்கு
இல்லாமையின்
கொடுமையையும்
உள்ளவனுக்கு
நிம்மதியின்மையையும் தரும்
விந்தை மிகு நோய் !

* * *

மனித
மதிப்பின்
மலர்மாலை !

* * *

வீட்டினதும்
நாட்டினதும்
பொருளாதார
ஜீவநாடி !

* * *

ஜனனி

06 - 07 - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே கேள்



பெண்ணே !
உன் பெருமை
உனக்குத் தெரியுமா ?

❀ ❀ ❀

நீ சிரிக்கும் போது
பூமி சிரிக்கிறது.
நீ அழும் போது
அதுவும் அழுகிறது !

❀ ❀ ❀

புவி சூரியனைச்
சுற்றுகிறதாம்.
அந்த
புவியின் இயக்கமே
நீதான் !

❀ ❀ ❀

உனக்குள்
கோடி சக்தியுண்டு.
உன்னை
நீ உணர்ந்தால்
அது
உனக்குப் புரியும் !

❀ ❀ ❀

நீ ஒரு உலகம் !
உன் குழந்தைக்கு
உன் கர்ப்பப்பை
உலகம் !

❀ ❀ ❀

நீ
தவறுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்களையும்
மன்னிக்கும்
ஒரே நீதிமன்றம்.
உன் பிள்ளைகளுக்கு !

❀ ❀ ❀

நீ
உனக்குள் பலதை
சுமக்கும் சுமைதாங்கி !

❀ ❀ ❀

நீ
குடும்ப விருட்ஷத்தின்
ஆணிவேர் !

❀ ❀ ❀

நீ அசைந்தாலோ
இல் வாழ்க்கையில் கலகம் !
நீ இசைந்தாலோ
பல்கலைக் கழகம் !

❀ ❀ ❀

நீ
உன்னையே எரித்து
உலகுக்கு
ஒளி வீசும்
தியாக தீபம் !

❀ ❀ ❀

நீ
அன்பின் பிறப்பிடம் !
கருணையின் இருப்பிடம் !
பாசத்தின் உறைவிடம் !
நீ
பெண்ணாக இருக்கும் வரை !

❀ ❀ ❀

## காதல் 'இம்பீச்மன்ட்'

காதலி !
உனக்கும் எனக்கும்
உள்ள தொடர்பு
பில்கிளின்டன் மொனிக்கா
தொடர்பல்ல !

இருந்தாலும்
ஈராக்கை அமெரிக்கா
தாக்கியது போல்
ஏன் நம் பெற்றோர்கள்
எம் காதலுக்கெதிராய்
அதிரடித் தாக்குதல்
ஓயாமல் நடத்துகிறார்கள் ?
காதல் 'இம்பீச்மன்ட்'
கொண்டு வருகிறார்கள் ?

காதலி !
எம் காதல்
ஆயுதங்களை விட
வலியது என்று
விரைவில் உணர்த்துவோம்
திருமணம் செய்து !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தை மீண்டும் கொண்டு வா



ஜய சூரிய !
வெற்றிச் சூரியனே !
உன் ஒளி
உலகெங்கும்
பரவியிருக்கிறது !

நீ
கிரிக்கட் வரலாற்றில்
ஒரு மைல்கல் !

நீ
சாதனைப் புத்தகத்தின்
சரித்திரப் பக்கங்களில்
உனது பெயரை
பல முறை பதிய வைத்தவன் !

புதிய பக்கங்களை
திறந்து வைத்தவன் !
சாதனைகளுக்கே
சோதனை வைத்தவன் !

ஒரு நாள் போட்டியின்
ஆட்ட வியூகத்தையே
மாற்றிக் காட்டியவன் !
'டெஸ்ட்' போட்டியில்
இணையாட்ட ஓட்டங்களால்
'எவரெஸ்ட்' டையே
தொட்டவன் !
உலக பந்து
வீச்சாளர்களுக்கு
உன்னைக் கண்டால்
சிம்ம சொப்பனம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
உன் துடுப்பாட்ட மட்டைக்கு
மந்திரமா சொல்லிக்
கொடுத்திருக்கிறாய் ?
இல்லை ! இல்லை !
விளையாடும் தந்திரம்
சொல்லிக்
கொடுத்திருக்கிறாய் !
அதனால் தானே
'யந்திரம்' போல்
ரன்களை குவிக்கிறாய் !

கறுப்புச் சிங்கமே !
நீ மட்டையோடு
மைதானத்துக்குள் வந்தால்
எதிரணியினர் எல்லாம்
உனக்கு வெள்ளாடுகள் தான் !

நீ
துடுப்பெடுத்தாடும் போது
எல்லைக் கோட்டுக்கு
வெளியேயும்
ஒரு அணியை வைக்க வேண்டும்
பந்தைப் பிடிப்பதற்கு !
இல்லாவிட்டால்
பார்வையாளர்கள் அல்லவா
'கட்ச்' பிடிக்கிறார்கள்.

உன் வெற்றியின்
ரகசியம் என்ன தெரியுமா ?
நீ
உனக்காக விளையாடாமல்
அணிக்காக விளையாடுவது
தான் !

அது எப்படி
நீ
பந்து வீச வந்தால்
ஓட்ட வேகம் குறைகிறது ?
விக்கட் வீழ்கிறது ?
ஆட்டம் சோபிக்கிறது.
வெற்றி நிச்சயிக்கப்படுகிறது ?

ஓ .....
உன் பெயரிலேயே
'ஜயம்' இருக்கிறதே !
அதனால் தானா
வெற்றிகளை மட்டுமே
சுற்றிக் கொண்டிருக்கிறாய் ?

வெற்றி வீரனே !
உன் துடுப்பாட்ட மட்டைக்கு
வேலை வந்து விட்டது !
புரிகிறதா ?
உலகக் கிண்ணப் போட்டி
எட்ட வந்து விட்டது !

புறப்படு !
வெற்றிக் கிண்ணத்தை
மீண்டும் ஒரு முறை
இங்கே கொண்டு வா !
சென்று வா வீரனே !
வென்று வா சூரனே !
ஜெயத்தைக் கொண்டு வா
'ஜய சூரிய' னே !

தினகரன்
02 - 05 - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்களே பதில் சொல்லுங்கள்.....

உலகக்கிண்ண சம்பியன்களே!
உங்களுக்கு
என்ன நடந்துவிட்டது ?
ஏன்
எங்களை
இப்படி ஏமாற்றினீர்கள் ?

விளையாட்டில்
வெற்றியும் தோல்வியும்
சகஜம் தான்
அதற்காக இப்படியா ?

'சுப்பர் சிக்ஸ்"க்குக்' கூடவா
தகுதியில்லாமல்
போய்விட்டீர்கள் ?

மீண்டும் கிண்ணத்தை
கொண்டு வாருங்கள்
என்றுதானே
வாழ்த்தி அனுப்பினோம் !
நீங்கள்
ரசிகர்களை அல்லவா
வீழ்த்திவிட்டீர்கள் !

உங்கள்
துடுப்பாட்டமட்டைகள்
தூங்கிக்கொண்டனவே ஏன் ?
உங்கள்
பந்துவீச்சுக்கள்
பதுங்கிக் கொண்டனவே ஏன் ?
களத்தடுப்பில்
கோட்டை விட்டீர்களே ஏன் ?
ஆட்ட வியூகங்கள்
ஆட்டம் கண்டனவே ஏன் ?
ஆரம்ப வீரர்கள்
அடிக்கடி மாறினரே ஏன் ?
அதிரடி வீரர்கள்
அடங்கிப் போனரரே ஏன் ?

மொத்தத்தில்
புரியாத புதிராய்ப்போனீர்களே !
ஏன் ? ஏன் ?

எங்களுக்கு
ஒரு சந்தேகம்
'நீங்கள் நாட்டுக்கு
விளையாடினீர்களா ?
இல்லை
உங்கள் பாட்டுக்கு
விளையாடினீர்களா ?' என்று.

முன்பு
கடைசிவரை போராடுவீர்களே !
இப்போது
ஆரம்பம் முதலே
தள்ளாடுகிறீர்களே ?
கிரிக்கட் வரலாற்றின்
சாதனைப் பக்கங்களை
நிரப்பியவர்களே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
சோதனைப் பக்கங்களை
வேதனை எழுத்துக்களால்
ரசிகர்களின்
இதயப்பக்கங்களிலல்லவா
எழுத வைத்துவிட்டீர்கள் ?

கட்டுப்பாட்டுச் சபையின்
ஆதிக்கக் காய்ச்சல்
உங்களையுமா தொற்ற
வேண்டும் ?
அதனால் தானே
களத்தில் எதிரணியினரோடு
மோதவேண்டிய நீங்கள்
உங்களுக்குள்
கருத்து மோதல்களில்
ஈடுபட்டிருக்கிறீர்கள் !
இல்லையேல் .....
மைதானப் பூங்காக்களில்
வாடியிருப்பீர்களா ?
கவனக் குறைவாகத்தான்
ஆடியிருப்பீர்களா ?
பலரும் உங்களைத்தான்
சாடியிருப்பார்களா ?
பாதியில் தாயகம்
நாடியிருப்பீர்களா ?

எங்கள்
சுட்டுவிரல்கள்
உங்களை நோக்கி
நீட்டப்பட்டிருப்பது
குறைகளை
சுட்டிக்காட்டத்தான்!
கறைகளை தட்டி நீக்கத்தான் !
'இலை மறைகளை'
வெளிக் கொணரத்தான்.

அணிக்குள்
களையெடுப்பு
நடாத்தப்பட வேண்டும் !
புதுப்பயிர்கள்
நடப்பட வேண்டும் !
புது நீர்
பாய்ச்சப்பட வேண்டும் !

அப்போதுதான்
இங்கே இனிமேல்
கிரிக்கட் வாழும் !

என்ன
ரசிகர்கள் சொல்வது சரியா ?

தினகரன்
27 - 06 - 1999

**( உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொண்டு தோல்வியடைந்து நாடு திரும்பிய இலங்கை கிரிக்கட் அணிக்காக எழுதப்பட்ட கவிதையிது. )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு

இரவின் ஓய்வு
பகல்.
பகலின் ஓய்வு
இரவு.
நிலவின் ஓய்வு
அமாவாசை.
உணவின் ஓய்வு
விரதம்.
உயிரின் ஓய்வு
மரணம்.
ஐம்புலன்களின் ஓய்வு
தூக்கம்.
இலைகளின் ஓய்வு
உதிர்வு.
இளமையின் ஓய்வு
முதுமை.
நனவின் ஓய்வு
கனவு.

ஓய்வு என்பது முடிவல்ல
ஆரம்பம் !
ஒரு முடிவின் ஆரம்பம் !

ஓய்வு என்பது முடிவல்ல
விடிவு !
இன்னொரு விடிவின் ஆரம்பம் !

ஓய்வு என்பது
இளைப்பாறல் அல்ல
உழைப்பின் ஆடல் !
களைப்பின் ஊடல் !
இன்னொன்றின் தேடல் !

ஓய்வு என்பது
சிறுகதையல்ல.
தொடர்கதை !
முற்றுப்புள்ளி அல்ல.
தொடர்புள்ளி ..... !

அறுபது வயதில்
தொழிலில்
ஓய்வு பெறுதல் என்பது .....

அது
மூப்புக்கு எடுக்கும்
விழா அல்ல !
உழைப்பு போகும்
சுற்றுலா !

அது
அறுபதைக் காட்டும்
அடையாளமல்ல !
அனுபவத்தைக் காட்டும்
சின்னம் !

அது
காலதேவன்
நரைக் கற்களால் கட்டிய
வெள்ளை மாளிகையல்ல !
அனுபவ அரசன் கட்டிய
தாஜ்மஹால் !

அது
வயதுக்கு எடுக்கும்
வைர விழா அல்ல !
உழைப்புக்கு எடுக்கும்
பாராட்டு விழா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது
வயதை விற்ற
விற்பனைப் பட்டியல் அல்ல.
அனுபவத்தை வாங்கிய
பற்றுச் சீட்டு !

அறுபதில்
ஓய்வு பெறுதல் என்பது .....

ஓய்வு - இனிமேல்
வாரத்தின் முடிவல்ல !
சுகயீன விடுமுறையோ
சமயோசித விடுமுறையோ
அல்ல !
என்று
சுதந்திர இறக்கைகள்
பொருத்தி விடுவது !

•

இனி
சுற்றமான காற்றை
கடலோரம்
காலாற நடந்து
வார நாட்களிலும்
சுவாசிப்பது !
வருட நாட்களிலும்
சுவாசிப்பது !

இயந்திர வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளி வைப்பது.
இதமான வாழ்க்கைக்கு
எம்மையே கொடுப்பது.

மரங்கள், செடி, கொடிகள்
மலைகள், ஆறுகள், அருவிகள்
பறவைகள் ..... என
இயற்கையோடு
இயற்கையாய்
ஒன்றி வாழ்வது.

பேரக் குழந்தைகளோடு
நாள் முழுதும்
கொஞ்சிக் குலாவுவது.
நிலாவைக் காட்டி
நிலாச்சோறு ஊட்டுவது.
பாட்டா பாட்டிக் கதை
பிரியமுடன் கூறுவது.
பாப்பாப் பாட்டு
தானும் பாடுவது.
பள்ளிப் பாடங்கள்
சொல்லிக் கொடுப்பது .....
என்று மனிதனுக்கு சொல்லிக்
கொடுப்பது !

ஆஹா .....
மொத்தத்தில்
இனிமேல்தான்
வாழ்க்கை ஆரம்பமாகப்
போகிறது !

மீண்டும்
குழந்தையாக வாழ
யாருக்குத்தான்
ஆசையிருக்காது.

ஓய்வு
நல்ல வீட்டில்
எம்மை குழந்தையாக்கிவிடும்.

ஓய்வு
முடிவல்ல !
வாழ்க்கையின் ஆரம்பம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ☺ வாலிபக் கிழடு ☺

மூன்றடி உயரங் கொண்ட மானிடன் – தன்
மனதினிலே தனக்(கு) அவர் மன்மதன்
மான் போலே துள்ளி யோடும் பெண்கள் – நடந்து
முன் போனால் துடிக்குமிவர் கண்கள் !

☺ ☺ ☺

'தவக்களை' யின் சாயலிந்த நாயகன் – கிழடு
தெரிந்தாலும் மறைக்கின்ற வாலிபன்
'சிவாஜி' போல் நடை யென்ற நினைப்பு – கடந்து
செல்கையிலே எல்லோருக்கும் சிரிப்பு !

☺ ☺ ☺

தமிழோடு பேசிடுவார் ஆங்கிலம் – அது
தரணிக்கிவர் தந்த 'தமிங்கிலம்'
'கமலஹாசன்' தோற்றுவிடும் புன்னகை – நரை
கண்டாலும் காட்டா(து) இவர் சிகை !

☺ ☺ ☺

ஆந்தை போன்று பிதுங்கி நிற்கும் விழிகள் – தனியே
உளறிடுவார் கோடி காதல் மொழிகள்
விந்தையாக உடுத்திடுவார் ஆடை – இவர்
வந்ததுமே எங்கும் 'கொலோன்' வாடை !

☺ ☺ ☺

எப்போதும் புகைத்திடுவார் 'பிரிஸ்டல்' அப்போது
இவர் புரிவார் கோடி 'ரஜனி' ஸ்டைல்
'ஹிப்பி' போல குளித்திட வெறுப்பு – வயது
ஐம்பது சென்றாலும் வாலிபக் குறும்பு

☺ ☺ ☺

**பூகம்பம்**
**1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விகள் ஜாக்கிரதை

மீட்டாத வீணை இது
யார் வந்து மீட்டுவது ?
பாடாத பாட்டு இது
யார் வந்து பாடுவது ?
ஆடாத மேடை இது
யார் வந்து ஆடுவது ?
சூடாத மாலை இது
யார் வந்து சூடுவது ?
ஏழைப் பெண்ணின்
ஏக்கம் இது
சீதனத்தின் தாக்கம் இது !

**வீரகேசரி**
**03 - 10 - 1999**

## பெருமைகள்

பருவத்தில் பெருமை இளமை
அனுபவத்தில் பெருமை முதுமை
கண்ணுக்குப் பெருமை கூர்மை
பெண்ணுக்குப்பெருமை மென்மை
ஆடைக்குப் பெருமை வெண்மை
ஆடவருக்குப்பெருமை ஆண்மை
வெற்றிக்குப் பெருமை திறமை
தோல்விக்குப்பெருமை பொறுமை

**வீரகேசரி**
**25 - 07 - 1999**

## உதவிகள்

பகலுக்கு
சூரியன் உதவி !
இரவுக்கு
நிலவின் உதவி !

மழைக்கு
முகிலின் உதவி.
மண்ணிற்கு
மழையின் உதவி.

உடலுக்கு
உயிரின் உதவி !
உயர்வுக்கு
உழைப்பின் உதவி !

வியாபாரத்தில்
விற்பனை உதவி !
கவிதைக்கு
கற்பனை உதவி !

உதவி என்பது
ஒன்றை
உயர்த்த உதவுவது !

உதவி என்பது
ஒன்றை
காக்க உதவுவது !

உதவி என்பது
ஒன்றை
ஆக்க உதவுவது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானம் பாடிய பறவைகள்

பள்ளிச் சோலையில் கல்வித் தேனை
பருக வந்த வண்டுகள் நாங்கள்
துள்ளித் திரிந்து பாடம் படித்து
துன்பம் துறந்த மான்கள் நாங்கள்
கள்ளங் கபடம் எதுவு மின்றி
கானம் பாடிய பறவைகள் நாங்கள் !

ய ய ய

ஆட்டம் ஆடி பாட்டுப் பாடி
இன்பம் கண்ட இளைஞர் நாங்கள்
போட்டிகள் என்றால் தலைமை யேற்று
பரிசை சுமக்கும் மாணவர் நாங்கள்
வாட்டம் கொள்ள பிரிவு வரவே
வார்த்தை யில்லா நிலையில் நாங்கள் !

ய ய ய

பெற்றவர் கனவை நனவுகளாக்க
பாடு படுவோம் இனியும் நாங்கள்
கற்றுத் தந்த ஆசிரியர்க் கெல்லாம்
கோடி நன்றி சொன்னோம் நாங்கள்
கற்ற பள்ளிப் பெருமை சொல்லக்
காலமெல்லாம் நடப்போம் நாங்கள் !

ய ய ய

பாசம் கொண்ட ஆசா னெல்லாம்
போற்றிப் புகழ்வார் என்போம் நாங்கள்
நேசம் கொண்டு பழகியவ ரெல்லாம்
நெஞ்சம் மறவார் என்போம் நாங்கள்
பசுமை நினைவை நெஞ்சில் இருத்தி
பறந்து செல்லும் இளையோர் நாங்கள் !

ய ய ய

**(உயர்தரவகுப்பு மாணவனாக எனது கல்லூரி வாழ்க்கையை முடித்தபோது, வகுப்பு மாணவர்கள் ஒன்று சேர்ந்து நடத்திய பிரியாவிடை வைபவத்தில் நான் வாசித்த கவிதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிது புதிதாய்ப் பிறப்போம்

கல்வி யுலகில் அறிவை வளர்க்கும் – பள்ளிக்
கூட புனித சேவகர் நாங்கள்
பள்ளிச் சோலையில் கல்வித் தேனை – ஊட்ட(ப்)
பறக்கும் விசித்திர வண்டுகள் நாங்கள்
துள்ளித் திரிந்து பாடம் புகட்டி – துன்பம்
துறந்த நல்லாசான் நாங்கள்
அள்ளக் குறையா செல்வம் கொடுக்கும் – வள்ளல்
என்னும் கல்விச் செல்வர் நாங்கள் !

அன்று போட்டிகள் என்றால் – துணிந்து
இறங்கி, பரிசை சுமக்கும் மாணவர் நாங்கள்
இன்று போட்டிகள் வைத்து – திறமை
ஒழுங்கில் மாணவர் தெரிவை கொடுப்பவர் நாங்கள்
அன்று வெள்ளைச் சீருடை அணிந்துச் சென்று – கற்க
ஓடிய பள்ளி மாணவர் நாங்கள்
இன்று, கண்ணியமாய் உடையுடுத்தி – அறிவை
ஊட்டும் நல்லாசிரியர் நாங்கள் !

தேனும் பாலும் கலந் துண்டு – சிலர்
தேகம் தன்னை வளர்ப்பது போல்
பண்பும் அறிவும் கலந்தூட்டி – நற்
பிரஜைகளை வளர்ப்பவர் நாங்கள்
கானம் பாடும் ராகக் குயிலை – கண்டு
களம் கொடுப்பவர் நாங்கள்
மாணவர் வாழ்வை வழி நடாத்தும் – நல்
மதிப்பு மிகு மனிதர் நாங்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் போற்றும் சேவை தனில் – எந்த
நாளும் தேயும் மெழுகு வர்த்திகள் நாங்கள்
ஆழி சூழ்ந்த வையமதில் – விடிவை
ஊட்டும் உதய சூரியன் நாங்கள்
கால விம்பம் காட்டுவதில் – இந்த
குவலயத்தின் கண்ணாடி நாங்கள்
சீலம் பேணும் உள்ளத்தோடு – என்றும்
வாழுகின்ற எளியோர் நாங்கள் !

○ ○ ○

தூற்றும் இந்த காசினியில் – எமை(ப்)
போற்றும் வகையில் வாழ்வோம் நாங்கள்
ஏற்றம் கொள்ள பணிகள் செய்து – என்றும்
உயர்வு கொள்ள விளைவோம் நாங்கள்
மாற்றம் வேண்டி நானிலத்தில் – நல்
மனதாய் சேவை புரிவோம் நாங்கள்
போற்றும் வகையில் கடமை தனில் - தினம்
புதிது புதிதாய்ப் பிறப்போம் நாங்கள் !

○ ○ ○

**('உலக ஆசிரியர் தினத்தை' முன்னிட்டு கொழும்பு, வடக்குக் கல்விக் கோட்டம் 1992ம் ஆண்டு நடாத்திய 'ஆசிரியர் தின விழா' வில் வாசித்த கவிதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அன்னை நீ வாழ்க !

செந்தமிழே ! உன் பெருமைப் பாட வேண்டும்
கவி மாலை நான் எழுதி சூட வேண்டும்
உன் புகழோ பாரெங்கும் ஒலிக்க வேண்டும்
தமிழ் அன்னை நீ வாழ்க ! புகழ் ஓங்க !

* * *

இனிய தமிழே ! உன் இளமை ரகசியம் என்ன ?
தமிழமுதச் சுவையினிலே இருப்பது என்ன ?
கவிஞரெலாம் உன் புகழைப் பாடுவதென்ன ?
காவியங்கள் படைத்து உனைப் போற்றுவதென்ன ?

* * *

நீ காலங்கள் கடந்து நிற்கும் சாதனை என்ன ?
தூய தமிழ் எங்கள் உயிர் ஆனதும் என்ன ?
நீ புதிதாக புதிதாக தினமும் தோன்றுவாய்
மொழி என்னும் கிண்ணத்தில் தேனை ஊற்றுவாய் !

* * *

முத்தமிழே உன்னழகை ரசித்திடும் போது
பொங்குகின்ற இன்பத்திற்கு ஈடிணை யேது ?
இயற்கை யெழில் உன் உருவில் ஒன்று கூடுமே
அழகு தமிழ் என்ற புகழ் உன்னில் சேருமே !

* * *

வானத்துக் கதிரவன் ஒளியினைப் போலே
உல கெங்கும் ஒளி வீசி வளர்ந்திடு மேலே
தமிழ் தேனே ! உன்னைத்தானே ! சுவைத்தேனே
உனை நினைந்து கவி புனைந்து படைப்பேனே !

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்கிரம் எனை சேர்ந்துவிடு

ஓர் உயிரும் ஈர் உடலாய்
அன்புடன் இணைந்திருந்தோம்
உரு மாறும் உலகினிலே
உறவாடி மகிழ்ந்திருந்தோம்
ஒரு போதும் பிரியாமல்
ஒன்றாய் வாழ்ந்திருந்தோம் !

✪ ✪ ✪

துன்பத்தில் நீ துவண்டால்
துடி துடித்துப் போய்விடுவேன்
இன்பத்தில் நான் திளைக்க
எதனையும் நீ சுமப்பாய்
பிணியில் வாடி நானிருந்தால்
பணிகள் செய்ய விழித்திருப்பாய் !

✪ ✪ ✪

கனவும், நனவும் ஒன்றெனவே
குவலயத்தை மறந்திருந்தோம்
சினிமா, பூங்கா கடற்கரையில்
சுற்றி தினம் மகிழ்ந்திருந்தோம்
தனிமைத் தீயில் தவிக்க விட்டு
துடிக்க வைத்தேன் இப்போ ?

✪ ✪ ✪

ஏற்றவள் என்று உனக் கின்று
உலகில் இருப்பது நானென்றால்
மாற்றம் கொண்டு மனந்திருந்தி
முகமன் மலர ஓடிவந்து
சீற்றங் கொண்ட என் கண்ணா
சீக்கிரம் எனை சேர்ந்துவிடு !

✪ ✪ ✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் நானும்

நீ
கவிதைக்கே
கவிதை சொல்லும்
கவிதை !

★ ★ ★

நான்
உந்தன்
உறவை நாடுகின்ற
பறவை !

★ ★ ★

நீ
ராத்திரியில்
பூத்திருக்கும்
நிலவு !

★ ★ ★

நான்
அல்லியென
காத்திருக்கும்
உறவு !

★ ★ ★

நீ
நந்தவனத்தில்
கூவித்திரியும்
குயில் !

★ ★ ★

நான்
உந்தன்
இசையில் ஆடுகின்ற
மயில் !

★ ★ ★

நீ
மலர்வனத்தில்
இதழ் விரிக்கும்
பூ !

★ ★ ★

நான்
மலரினையே
சுமந்து நிற்கும்
பா !

★ ★ ★

நீ
வார்த்தைகளை
விழியில் வைத்த
கோதை !

★ ★ ★

நான்
விழியினிலே
மொழிகள் கண்ட
மேதை !

★ ★ ★

நீ
எந்தன்
கவியில் வாழுகின்ற
கரு !

★ ★ ★

நான்
நின்னையே
நினைந்திருக்கும்
உரு !

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நூற்றாண்டே வா !

புதிய நூற்றாண்டே
புறப்பட்டு வா !

۞ ۞ ۞

புத்தாயிரமாம் ஆண்டே
புறப்பட்டு வா !

۞ ۞ ۞

புது 'மிலேனியமே'
புறப்பட்டு வா !

۞ ۞ ۞

கடந்த நூற்றாண்டைப்போல்
கறுப்பு ஆண்டுகளை
கொண்டு வராதே !

۞ ۞ ۞

இறந்த நூற்றாண்டைப்போல்
இரத்த ஆண்டுகளை
கொண்டு வராதே !

۞ ۞ ۞

புது யுகமாய்
புறப்பட்டு வா !

۞ ۞ ۞

நீ
வெற்றுக்கைகளை
வீசி வராதே.
சமாதானப் பொதியை
சுமந்து வா !

۞ ۞ ۞

நீ
தரணிக்கு
தனியே வராதே.
அமைதிப் புறாவை
அழைத்து வா !

۞ ۞ ۞

உன்னை வரவேற்க
உலகமே
உசாராகிக்
கொண்டிருக்கிறது.

۞ ۞ ۞

உலகம்
உன்னை
அவசரமாய்க் கொண்டாடுகிறது!
நீ எமக்கு
ஆறுதல் கொண்டு வா !
மாறுதல் கொண்டு வா !

۞ ۞ ۞

யுத்த அரக்கனை
சம்ஹாரம் செய்து
அமைதிப் பூவினை
சூடி வா !

۞ ۞ ۞

இரவுகள்
எம்மை பயமுறுத்தியது போதும்.
நிம்மதி
இரவுகளை
உறவாக்க வா !

۞ ۞ ۞



UNIVERSITY OF PERADENIYA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல்கள்
மண்ணை
சிவப்பாக்கியது போதும்.
புது விடிவை
படைத்து வா !

❊ ❊ ❊

உனக்காக
உலக நாடுகள்
நினைவுச் சின்னங்கள்
அமைத்து முடித்து விட்டன.

❊ ❊ ❊

உனக்காக
உலகம்
விரித்து வைத்திருக்கும்
செங்கம்பளத்தில்
சரித்திரம் படைக்க
சிரித்து வா !

❊ ❊ ❊

உனக்காக
தூவப்பட்டிருக்கும்
பூக்கள் மீது
சமாதானப் பாக்கள் பாடி
நடந்து வா !

❊ ❊ ❊

குமரிப் பெண்ணின்
எதிர்கால கனவுகள் போல்
எதிர்ப்பார்ப்புகளோடு
இங்கே நாங்கள்.......

❊ ❊ ❊

நீ
எங்களை
ஏமாற்றிவிடாதே !

❊ ❊ ❊

கனவுகளை
கலைத்துவிடாதே !

❊ ❊ ❊

புதுயுகம் படைக்க
புறப்பட்டு வா !

❊ ❊ ❊

புதுமைகள் புரிய
புறப்பட்டு வா !

❊ ❊ ❊

UNIVERSITY OF PERADENIYA
2003-5-20
LIBRARY



535046
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி . . . . .



535046

கலாநெஞ்சன் ஷாஜஹான்

"ஏன் இந்த மௌனம்?" என்று வினவும் கலாநெஞ்சன் ஷாஜஹான் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது நீர்கொழும்பு, தளுபொத்த, பல்லன்சேனை வீதியில் வசித்து வருபவர்.

கொழும்பு, ஹமீத் அல் ஹுசைனி மகாவித்தியாலயம், கொழும்பு, ஸாஹிராக் கல்லூரி என்பவற்றின் பழையமாணவர். நீர்கொழும்பு, விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் சுறுசுறுப்பான ஆசிரியர்.

1979ம் ஆண்டு முதல் எழுதிவரும் இவர், **'இதய கீதம்'**, **'மெட்டுச்சரம்'** என்ற இரண்டு இஸ்லாமியப்பாடல் தொகுதிகளையும், **'மீண்டும் ஒரு தாஜ்மஹால்'** என்ற கவிதைத் தொகுதியினையும் இலக்கிய உலகிற்குத் தந்தவர்.

கவிதை, சிறுகதை, பாடல் இயற்றுதல், நாடகம், வில்லுப்பாட்டு, விமர்சனம் முதலிய இலக்கியவடிவங்களூடாக குரல்கொடுத்து வருபவர். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற இலக்கியப் போட்டிகளில் ஏராளமான பரிசுகளை வென்றவர்.

பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, கலைவிழா என்பவற்றுக்கூடாக கலையுலகிற்கு பங்களிப்பு செய்து வரும் இந்த மானுடநேய உணர்வுகொண்ட கவிஞர், ஒரு சிறந்த விளையாட்டு வீரர்; சாரணர் தலைவர்; நடிகர்; பயிற்றப்பட்ட உடற்கல்வி ஆசிரியர். 'சாவ்' (V - SAF Games - '91) விளையாட்டுப் போட்டி கொழும்பில் நடைபெற்றபோது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வர்ணனையாளராகக் கடமையாற்றியவர். அத்துடன் அங்கு பல வருடகாலம் பகுதிநேர, நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகவும் கடமையாற்றியவர்.

பல துறைகளிலும் பிரகாசிக்கும் இந்த பல்துறைக் கலைஞ[ன்] படைப்புக்கள் நாட்டிற்கும் சமூகத்திற்கும் என்றும் பயன்மிக்கதாக அமை[யும்] என்பதில் ஐயமில்லை.

எம்.எச்.எம்.சிராஜ் (Dip. in Journ)

Printed by PRINT - N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org